மாநகர சபை, யாழ்ப்பாணம்,

பக்கங்கள்: பன்னிரண்டு

# உதயன்

மக்கள் மனம் நிறைந்த தமிழ் நாளிதழ்

விலை ரூபா 15.00

www.uthayan.com

சுடர் 25 வள்ளுவர் ஆண்டு 2041 தை 14 புதன்கிழமை (27.01.2010) UTHAYAN-A Lively National Tamil Daily கதிர்: 062

## நேற்றைய ஜனாதிபதித் தேர்தலில்

# நாடளாவிய ரீதியில் மொத்தம் 74 சத வீத வாக்குகள் பதிவு

## தெற்கில் மும்முரம், வடக்கில் மந்தம், கிழக்கில் மத்திமம்

கொழும்பு, ஜனவரி 27

மொத்தம் உள்ள இருபத்திரெண்டு தேர்தல் மாவட்டங்களில் நேற்று நடைபெற்ற ஆறாவது ஜனாதிபதித்தேர்தலில் நாடளாவிய ரீதியில் தகுதி பெற்ற வாக்காளர்களில் 74 சத வீதத்தினர் தமது வாக்குகளை அளித்தனர் என்று தெரிவிக்கப்பட்டது.

தென்னிலங்கையில் வெகு மும்முரமாகவும் வடக்கில் மந்தமாகவும், கிழக்கில் மத்திமமாகவும் வாக்களிப்பு நடைபெற்றதாகவும் அறிவிக்கப்பட்டது.

யாழ்ப்பாணம் தேர்தல் மாவட்டத்தில் 26 வீதமான வாக்குகளும் வன்னித் தேர்தல் மாவட்டத்தில் 40 வீத வாக்குகளும் அளிக்கப்பட்டதாக முந்திக்கிடைத்த புள்ளி விவரங்கள் தெரிவித்தன.

கிழக்கு மாகாணத்தின் மூன்று தேர்தல் மாவட்டங்களிலும் சுமார் 40 சத வீதமான வாக்குகள் பதிவாகியதாக உத்தியோக பூர்வமற்ற தகவல்கள் மூலம் தெரியவந்தது.

கொழும்பு மற்றும் மலையகப் பகுதிகளில் 65 முதல் 70 சதவீத வாக்காளர்கள் தமது வாக்குகளைச் செலுத்தினர் என்றும் தெற்கு மாவட்டங்களில் 75 சத வீதமாக வாக்காளர்கள் உற்சாகத்தோடு வாக்களித்ததாகவும் தகவல்கள் தெரிவித்தன.

தபால் மூல வாக்களிப்பு விவரங்கள் நேற்று நள்ளிரவுக்குச் சற்று முன்னர் உத்தியோக பூர்வமாக வெளியாக ஆரம்பமாகின. (அ)

## தொடர் குண்டு வெடிப்பால் குடாநாட்டில் மக்கள் வாக்களிக்க முடியாத நிலை

### தேர்தல் ஆணையாளரிடம் தமிழரசுக்கட்சி முறைப்பாடு

யாழ்ப்பாணம், ஜன.27

யாழ். மாவட்டத்தில் இடம்பெற்ற குண்டு வெடிப்புக்களால் மக்கள் வாக்களிக்க முடியாத நிலை ஏற்பட்டதை சுட்டிக்காட்டி இலங்கை தமிழரசு கட்சி, தேர்தல் ஆணையாளர் தயானந்த திஸநாயக்கவுக்கு கடிதமொன்றை அனுப்பிவைத்துள்ளது.

இடம் பெயர்ந்த மக்கள் வாக்களிப்பதற்காக உரிய போக்குவரத்து வசதிகள் வழங்கப்படாதமையையும் சுட்டிக்காட்டியுள்ள தமிழரசுக் கட்சி, தனது கடிதத்தில் மேலும் தெரிவித்துள்ளவை வருமாறு:-

யாழ். மாவட்டத்தின் பல பகுதிகளில் நேற்று அதிகாலை முதல் குண்டுகள் வெடித்தன. இதன் காரணமாக சிலர் காயமடைந்துள்ளனர்.

வாக்காளர்கள் மத்தியில் அச்சத்தைத் தூண்டுவதன் மூலமாக நீதியான, சுதந்திரமான தேர்தலைத் தடுக்கும் நோக்கத்துடனேயே இதனை வேண்டுமென்று செய்துள்ளனர்.

(12ஆம் பக்கம் பார்க்க)

## வாக்களிப்புத் தினத்தில் மட்டும் வன்முறைச் சம்பவங்கள் 70 க்கும் அதிகம்

கொழும்பு, ஜன. 27

ஜனாதிபதித் தேர்தல் வாக்களிப்பு தினமான நேற்று எழுபதுக்கும் மேற்பட்ட தேர்தல் வன்முறைச் சம்பவங்கள் இடம்பெற்றன எனத் தேர்தல் கண்காணிப்பு அமைப்புகள் தெரிவித்துள்ளன.

நேற்று வாக்களிப்பு காலத்தில் 65 இற்கும் மேற்பட்ட சம்பவங்கள் இடம்பெற்றன. இவற்றுள் 30 சம்பவங்கள் பாரதூரமானவை எனத் தேர்தல் வன்முறைகளைக் கண்காணிப்பதற்கான நிலையம் தெரிவித்துள்ளது.

சில இடங்களில் தேர்தல்கள் நீதியாகவும், சுதந்திரமாகவும் இடம்பெற்றன எனக் குறிப்பிட முடியாது என அந்த அமைப்பு தெரிவித்தது.

இதேவேளை, நேற்று நண்பகல் வரை 45 தேர்தல் சட்டமீறல் சம்பவங்கள் இடம்பெற்றன என 'கபே' அமைப்புத் தெரிவித்துள்ளது.

நாவலப்பிட்டியில் பரவலாகத் தேர்தல் வன்முறைகள் இடம்பெற்றன எனத் தெரிவித்

(12ஆம் பக்கம் பார்க்க)

### தபால் மூல வாக்களிப்பு முடிவுகள்

கொழும்பு, ஜன.27

நேற்றைய ஜனாதிபதித் தேர்தலில் முற்கொண்டு கிடைத்த தபால் மூல வாக்களிப்பு விவரம் வருமாறு:-

யாழ்ப்பாணம் தேர்தல் மாவட்டம்
- சரத் பொன்சேகா - 3,173
- மஹிந்த ராஜபக்ஷ -892
- சிவாஜிலிங்கம் -263

திருகோணமலை தேர்தல் மாவட்டம்
- மஹிந்த ராஜபக்ஷ - 6,882
- சரத் பொன்சேகா - 3,798

இரத்தினபுரி தேர்தல் மாவட்டம்
- மஹிந்த ராஜபக்ஷ - 9,458
- சரத் பொன்சேகா - 4,143

(12ஆம் பக்கம் பார்க்க)

## குடாநாட்டில் அதிகாலைக் குண்டுத் தாக்குதல்கள்; வாக்களிப்பு காலையில் மந்தம்; பின்னர் மத்திமம்

உதயன் பிரதேச செய்தியாளர்கள்

யாழ்ப்பாணம், ஜன. 27

ஜனாதிபதித் தேர்தலுக்கான வாக்களிப்பு நேற்று இடம்பெற முன்னர் குடாநாட்டின் பல இடங்களிலும் அதிகாலை வேளை குண்டுத்தாக்குதல்கள் இடம்பெற்றுள்ளன. இந்தக் குண்டுத்தாக்குதல்களினால் உயிர்ச்சேதங்கள் எதுவும் ஏற்படவில்லை.

நேற்று அதிகாலை 2 மணிமுதல் 3 மணி வரையான ஒரு மணிநேர இடைவேளையிலேயே இந்தக் குண்டுத்தாக்குதல்கள் பரவலாகப் பல இடங்களிலும் இடம்பெற்றன என்று உதயனின் பிரதேச செய்தியாளர்கள் தெரிவித்தனர்.

சுன்னாகம், கந்தரோடை, றோமன் கத்தோலிக்க தமிழ்க் கலவன் பாடசாலையில் அமைக்கப்பட்டிருந்த வாக்களிப்பு நிலையத்தின் மீது நேற்று அதிகாலை 2.20 மணி

(12ஆம் பக்கம் பார்க்க)

## பொன்சேகாவுக்கு எதிராக வழக்கு: நேற்று அரச தரப்பில் அறிவிப்பு

கொழும்பு, ஜன.27

ஜனாதிபதி வேட்பாளரான சரத்பொன்சேகாவின் வாக்குரிமை தொடர்பாக நீதிமன்றில் வழக்குத் தாக்கல் செய்யவிருப்பதாக அரசு அறிவித்துள்ளது.

நேற்றிரவு அரசுத்தரப்பினர் நடத்திய செய்தியாளர் மாநாட்டிலேயே இத் தகவல் தெரிவிக்கப்பட்டது.

அமைச்சர்களான ராஜித சேனாரத்ன, பிரேம

(12ஆம் பக்கம் பார்க்க)

## பொன்சேகா வாக்களிக்கச் செல்லவில்லை; வென்றால் பதவியேற்க முடியாது எனச் சர்ச்சை

கொழும்பு, ஜன. 27

நேற்று இடம்பெற்ற ஜனாதிபதித் தேர்தலின் வாக்களிப்பில் எதிர்க்கட்சிகளின் பொதுவேட்பாளர் ஜெனரல் சரத் பொன்சேகா வாக்களிக்கவில்லை. அவரது பெயர் வாக்காளர் பட்டியலில் பதிவு செய்யப்படாத காரணத்தினாலேயே அவர் வாக்களிக்கச் செல்லவில்லை.

ஆனால் அவரது பெயர் வாக்காளர் பட்டியலில் இல்லாதமைக்கு அவர் அமெரிக்கப் பிரஜை என்பதே காரணம் என்றும் -

(12ஆம் பக்கம் பார்க்க)




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# அகவை அறுபதில் வாழ்த்துகின்றோம்



## செல்லப்பா சிவராசா

(விற்பனை முகாமையாளர்,
அண்ணா இன்டஸ்றீஸ்,
இணுவில்)

இன்று (27.01.2010) புதன்கிழமை அகவை அறுபதில் மனையரசி மக்களோடு நீடூழி வாழ்கவென வாழ்த்துகின்றோம்.

(சி/564466)

வாழ்த்துவோர்:
திரு.திருமதி பா. சுதாகரன் குடும்பம்,
திருமதி கு.தவமணி குடும்பம்,
திரு.திருமதி செந்தில்குமரன் குடும்பம்.

துரை வீதி,
கோண்டாவில் மேற்கு,
இணுவில்

# கும்பாபிஷேக தின நிகழ்வு

கெருடாவில் அருள்மிகு ஸ்ரீ தொட்டில் கந்தசுவாமி தேவஸ்தான மகா கும்பாபிஷேக தினமான இன்று (27.01.2010) புதன்கிழமை மு.ப.9.35 தொடக்கம் 10.30 மணியளவில் மகாகும்பாபிஷேகம் நடைபெறும். அன்று இரவு ஆறுமுகப் பெருமான் வள்ளி தெய்வானை சமேதராக வீதி உலாவருவார்.

அதனைத் தொடர்ந்து மேளக்கச்சேரியும் சாரங்கா இசைக்குழுவின் இன்னிசை கானங்களும் நடைபெறும்.

ஆலய ஆதின கர்த்தாவும்,
பிரதம குருவுமாகிய,
மு.பாலசுப்ரமணியக்குருக்கள்.

(C/564461)

# தைப்பூசத் திருவிழா

சாவகச்சேரி வாரிவனம் ஸ்ரீ முத்துமாரி அம்மன் தேவஸ்தானத்தின் தைப்பூச திருவிழா எதிர்வரும் 30.01.2010 சனிக்கிழமை பிற்பகல் ஒரு மணியளவில் நபன அபிஷேகமும் தொடர்ந்து பூசை, வசந்த மண்டபப் பூசை, சுவாமி வலம் வருதலும் அதனைத் தொடர்ந்து 2மணியளவில் மகேஸ்வர பூசையும் நடைபெறும்.

அன்று விஷேட நிகழ்வாக காலை 8மணி தொடக்கம் உடுக்குப்பாட்டும் அதனைத் தொடர்ந்து மேளக்கச்சேரியும் முத்துமாரி அம்மன் ஆலய விக்கிரகங் களுக்கு பாலாபிஷேகமும் நடைபெறும்.

அடியார்கள் அனைவரையும் இவ் விழாவில் கலந்து சிறப்பித்து அன்னை அருள்பெற்றுய்யுமாறு அன்புடன் கேட்டுக்கொள்கின்றோம்.

வை.சிவராசா,
திருப்பணியாளர்.

(C/564462)

# மரண அறிவித்தல்

## சின்னத்துரை செல்லாச்சிப்பிள்ளை



தொல்புரத்தைப் பிறப்பிடமாகவும் வடலியடைப்பை வசிப்பிடமாகவும் கொண்ட சின்னத்துரை செல்லாச்சிப்பிள்ளை நேற்று (26.01.2010) செவ்வாய்க்கிழமை வடலியடைப்பில் காலமானார்.

அன்னார் காலஞ்சென்ற சின்னத்துரையின் மனைவியும் காலஞ்சென்ற சங்கரப்பிள்ளை -வள்ளியம்மையின் மகளும், கணபதிப்பிள்ளை- தங்கமுத்துவின் மருமகளும், தெட்சணாமூர்த்தி, தணிகாசலம், தவராசா, தவயோகராணி, செல்வராணி, இன்பராசா, ஜெயராணி (வலுவிழந்தோர் புனர்வாழ்வுச்சங்கம்), புனிதராணி ஆகியோரின் அன்புத்தாயாரும் பத்மாவதி, பகவதி, சந்திரேஸ்வரி, செல்வராசா, அமரர் சுனகரத்தினம், விஜயரஞ்சனி, சிவநாதன், பாலசிங்கம் ஆகியோரின் அன்பு மாமியும் சின்னராசா மற்றும் அமரர்களான கனகசபை, பொன்னையா, அன்னம்மா, சின்னையா, கந்தசாமி, வீரசிங்கம் சின்னம்மா, சரஸ்வதி ஆகியோரின் சகோதரியும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் பற்றிய விவரம் பின்னர் அறியத் தரப்படும்.

அரசடி. வீதி,
வடலியடைப்பு.

தகவல் :
பிள்ளைகள், மருமக்கள்,
பேரப்பிள்ளைகள்.

# குருபூசை தின விழா

யாழ்ப்பாணம், ஜன.27

கைதடி, மாதாஜி லிங்கேஸ்வரர் ஆலயத்தில் தவத்திரு ஸ்ரீ சச்சிதானந்த சுவாமிகளின் குருபூசைத் தின விழா நாளை மறுதினம் வெள்ளிக்கிழமை முற்பகல் 11மணியளவில் நடைபெறவுள்ளது.

முற்பகல் 9மணியளவில் விசேட பஜனையும், 11மணியளவில் விசேட அபிஷேக பூசைகளும் இடம்பெற்று நண்பகல் 12.30 மணியளவில் மகேஸ்வர பூசையும் இடம் பெறவுள்ளது. (ஒ-9)

# செவ்வாயன்று பருத்தித்துறையில் விசேட தோல் 'கிளினிக்'

யாழ்ப்பாணம், ஜன.27

பருத்தித்துறை ஆதார வைத்தியசாலையில் எதிர்வரும் 2ஆம் திகதி செவ்வாய்க்கிழமை காலை 8மணி முதல் நண்பகல் 12மணி வரை விசேட தோல் சிகிச்சை 'கிளினிக்' ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது.

லண்டனில் இருந்து வருகை தந்துள்ள தோல் சிகிச்சை நிபுணர் வைத்திய கலாநிதி எஸ்.ரவீந்திரன் சிகிச்சை அளிப்பார்.

நோயாளர்கள் இதில் பங்குபற்றிப் பயனடையுமாறு மாவட்ட வைத்திய அதிகாரி வி.ஜெயராஜா அறிவித்துள்ளார். (ஒ-16)

# புனித பிரான்சிஸ் சலேசியார் ஆலயம்

## சங்கானை

மறை பாடசாலை கட்டட நிதிக்காக நடத்தப்பட்ட அதிர்ஷ்டலாபச் சீட்டிழுப்பு முடிவுகள்

முதலாம் பரிசு - 7255
இரண்டாம் பரிசு - 0312
மூன்றாம் பரிசு - 4036

பத்து ஆறுதல் பரிசுகள்

| | |
|---|---|
| 1. 0995 | 6. 7015 |
| 2. 5513 | 7. 3004 |
| 3. 1316 | 8. 7011 |
| 4. 0868 | 9. 1838 |
| 5. 5964 | 10.3657 |

செயலாளர்
ஆலய அருட்பணிச் சபை
தொடர்புகளுக்கு - 0774010333

# கண்ணீர் அஞ்சலி



எமது கழக அங்கத்தவர் க.சுந்தரேசன் (சுந்தர்), கழக ஆர்வலர் க.காயத்திரி ஆகியோரின் அன்புத் தாயாரும், கழக நிறைவாழ்வக ஆர்வலர் அருளானந்தம் அனோஜனின் பெரியம்மாவும் ஆகிய திருமதி

## சிவயோகசுந்தரி கணேசமூர்த்தி

(சிவமணி, நந்தாவில், கொக்குவில் கிழக்கு)

அவர்கள் 25.01.2010 அன்று காலமான செய்தி அறிந்து எமது கழக சமூகம் ஆறாத் துயர் கொள்கின்றது.

அன்னாரின் ஆத்மா சாந்தியடைய பிரார்த்திப்பதுடன் அவரின் குடும்பத்தினருக்கு எமது ஆழ்ந்த அனுதாபங்களைத் தெரிவித்துக் கொள்கின்றோம்.

ஓம் சாந்தி! சாந்தி!! சாந்தி!!!

வளர்மதி முன்னேற்றக் கழகமும்,
வளர்மதி நிறைவாழ்வகமும்.

சம்பியன் வீதி,
கொக்குவில்.

(C/564463)

# மரண அறிவித்தல்கள்

## சுப்பையா பரமலிங்கம்

இணுவில் மஞ்சத்தடியைப் பிறப்பிடமாகவும் நாவற்குழியை வசிப்பிடமாகவும் கொண்ட சுப்பையா பரமலிங்கம் நேற்று (26.01.2010) செவ்வாய்க்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான சுப்பையா - கனகம்மா தம்பதியினரின் அன்பு மகனும் காலஞ்சென்றவர்களான இராசையா - கனகம்மா தம்பதியினரின் மருமகனும் இரத்தின பூபதியின் அன்புக்கணவரும் ஸ்ரீஸ்கந்தராசா (மயூரா மருந்தகம், திருநெல்வேலி), கிரிஜா, காலஞ்சென்ற சுதந்திரன் ஆகியோரின் தந்தையும், ஜெயந்தி (ஆசிரியை, கோப்பாய் மகா வித்தியாலயம்), செல்வநேசன், விஜயமலர் ஆகியோரின் அன்பு மாமனாரும் ஜெயவைஷாலி, ஜெய்மாறன், சரணியா, சதுர்ஷன், கவித்திரா, இயலினி ஆகியோரின் அன்புப் பேரனும் இளையதம்பி, சிவராசா (தொண்டர்), இரத்தினேஸ்வரி, நடேசலிங்கம் (பிரான்ஸ்) ஆகியோரின் அன்புச் சகோதரரும் இந்திர பூபதியின் மைத்துனரும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று புதன்கிழமை (27.01.2010) நண்பகல் 12 மணியளவில் அவரது இல்லத்தில் நடைபெற்று பூதவடல் தகனக்கிரியைக்காக நாவற்குழி இந்து மயானத்திற்கு எடுத்துச் செல்லப்படும்.

இந்த அறிவித்தலை அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

சித்திவிநாயகர் கோவிலடி,
நாவற்குழி மேற்கு.

(942071)

தகவல் :
ப. ஸ்ரீ (மகன்).

## சபாபதி சீவரத்தினம்



திருநெல்வேலி மேற்கு, தலங்காவற் பிள்ளையார் கோவிலடியைப் பிறப்பிட மாகவும், வசிப்பிடமாகவும் கொண்ட சீவரத்தினம் நேற்று (25.01.2010) திங்கட்கிழமை காலமாகிவிட்டார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான சிற்பாசாரியார் சபாபதி-சின்னம்மா தம்பதியினரின் அன்பு மகனும், காலஞ்சென்ற சிற்பாசாரியார் கந்தசாமி மற்றும் சிவபாக்கியம், யோகம்மா, பராசக்தி, தங்கப்பொன் (இளைப்பாறிய ஆசிரியை) ஆகியோரின் அன்புச் சகோதரரும் காலஞ்சென்றவர்களான, கனகாம்பிகை மற்றும் கார்த்திகேசு, காலஞ்சென்றவர்களான கந்தையா, இராசநாயகம் ஆகியோரின் மைத்துனரும், கேதீஸ்வரன் (அபுதாபி), கமலாதேவி, லிங்கேஸ்வரன் (ஹொலண்ட்), சிவனேஸ்வரன் (ஜேர்மனி), தயாளசிங்கம் (பிரான்ஸ்), நல்லலிங்கம் (லண்டன்), காலஞ்சென்ற தேவராணி மற்றும் வசந்தகுமார் (லண் டன்), தேவகுலசிங்கம் (பொறியியல் பிரிவு, CTB, திருகோணமலை), சோதிலிங்கம், சற்குணதேவி (தட்டெழுத்தாளர் - கட்டடத் திணைக்களம்), சிவநாதன் ஆகியோரின் அருமை மாமனும் ஆவார்.

அன்னாரின் அந்திமக்கிரியைகள் இன்று (27.01.2010) புதன்கிழமை தலங்காவற் பிள்ளையார் கோவிலடியில் உள்ள இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் பிற்பகல் 2மணிக்கு திருநெல்வேலி இந்து மயானத்திற்கு தகனக்கிரியைக்காக எடுத்துச் செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

தலங்காவற் பிள்ளையார்
கோவிலடி, திருநெல்வேலி.

(C/564448)

தகவல் :
செல்வி சபாபதி தங்கப்பொன்
(இளைப்பாறிய ஆசிரியை.)

## சின்னையா வேலாயுதம்

(தேநீர்க் கடை கந்தையா)



நெல்லியடியைப் பிறப்பிடமாகவும், வசிப்பிடமாகவும் கொண்ட சின்னையா வேலாயுதம் நேற்று (26.01.2010) செவ்வாய்க்கிழமை காலமானார்.

அன்னார் இராசம்மாவின் அன்புக் கணவரும், இந்திராதேவி, பாலேந்திரன், பாலச்சந்திரன், காலஞ்சென்ற பாலகிருஷ்ணன் (பொறியியலாளர்- அவுஸ்திரேலியா), காலஞ்சென்ற பாலசுப்பிர மணியம் ஆகியோரின் அன்புத் தந்தையும், சத்தியசீலன், வசந்தாதேவி, விஜயலக்சுமி, இந்திராதேவி ஆகியோரின் மாமனாரும், சசிகரன் (சோலை வீடியோ), சசிதா (கனடா), கஜேந்திரன், விஜயபாஸ்கர், பாலமுரளி, நவநீதன், கீர்த்தனா, அபிராமி ஆகியோரின் பேரனும், விதுசன், தர்மினி ஆகியோரின் பூட்டனுமாவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (27.01.2010) புதன்கிழமை பி.ப 2மணியளவில் இடம்பெற்று பூதவுடல் தகனக் கிரியைக்காக ஆலங்கட்டை இந்து மயானத்திற்கு எடுத்துச் செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் ஏற்றுக் கொள்ளவும்.

(91037)

தகவல் :
குடும்பத்தினர்.

யாழ்மாவட்டத்தில் அங்கீகரிக்கப்பட்ட முகவர்
FedEx Express
விரைவு பாதுகாப்பு நம்பகத்தன்மை
வாடிக்கையாளரின் நலன்கருதி
10% - 25 % விசேட கழிவு
உள்நாடு, வெளிநாடுகளுக்கு கடிதங்கள், அன்பளிப்புப் பொருள்கள், உணவுப்பொருள்கள், உடுபுடவைகள் மற்றும் VDO பிரதிகள், CD க்கள் என்பன ஏற்றுக்கொள்ளப்படும்.
குறிப்பிட்ட முகவரியில் ஒப்படைக்கப்படும்
குறைந்த கட்டணத்திலான உள்நாடு வெளிநாடுகளுக்கான துரித தபால்கள் பொதிகள் சேவை
திருமுருகன் கொம் நெற்
259, கே.கே.எஸ். வீதி, யாழ்ப்பாணம். T.P- 2227835 (சில் சிலோன் டிஸ்றிபியூட்டர்ஸ் முன்பாக)
46, ஆடியபாதம் வீதி, திருநெல்வேலி. (நல்லூர் ப.நோ.கூ.சங்கம் முன்பாக)
TCN EXPRESS
28, Nelson Place, Colombo -06
லண்டன், சுவிஸ், பிரான்ஸ் நாடுகளுக்கு 3 கிலோவுக்கு குறையாத பொதிகளிற்கு 1Kg 550/=ரூபா வீதமும். கனடாவுக்கான 3 கிலோவுக்கு குறையாத 1Kg பொதிகளிற்கு 550/= ரூபா வரையான விசேட சலுகை
ஞாயிறு விடுமுறை தினங்களிலும் சேவைகளை பெற்றுக்கொள்ளலாம்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உதயன்

தொலைபேசி 222 3837, 222 9933 தொலைநகல்.: 222 9944

## யார் வென்றாலும்... யார் தோற்றாலும்...!

இன்று காலை இந்தப் பத்தியை வாசிக்கும்போது, இலங்கையின் அடுத்த நிறைவேற்று அதிகார ஜனாதிபதியாகப் பதவியில் இருக்கப் போகின்றவர் யார் என்பது பெரும்பாலும் - ஓரளவுக்கு - முடிவாகியிருக்கும்.

யார் வென்றாலும், யார் தோற்றாலும், இத் தேர்தலில் இரண்டு பிரதான வேட்பாளர்களுமே சளைக்காமல் ஏட்டிக்குப் போட்டியாகக் களத்தில் மோதினர் என்ற பதிவை அவர்கள் விட்டுச் செல்வர். என்பது உறுதி.

இந்தத் தேர்தலில் பிரசார காலத்தில் இடம்பெற்ற மிக மோசமான வன்முறைகளைப் போலவே வாக்களிப்பு சமயத்திலும் பரவலாக வன்முறைகள், குளறுபடிகள், அடாவடித்தனங்கள் இடம்பெற்றிருக்கின்றன என்ற தகவல், இத் தேர்தல் ஆரம்பம் முதல் இறுதி வரை வன்முறைக் களத்திலேயே அரங்கேறி முடிந்திருக்கின்றது என்பதை உறுதிப்படுத்தி நிற்கின்றது.

எது, எப்படியென்றாலும், வடக்கில் - யாழ். குடாநாட்டில் - அச்சுறுத்தல்கள் மூலம் வாக்களிப்பைத் தடுப்பதற்குத் திட்டமிட்டு எடுக்கப்பட்ட முயற்சிகள் பெரிய பலனைத் தரவில்லை எனத் தகவல்கள் தெரி விக்கின்றன. யாழ். குடாநாட்டு மக்களைப் பொறுத்த வரை குண்டுச் சத்தங்களும், அதிர்வுகளும் அவர்களுக்குப் புதியவை அல்ல. அவர்களின் வாழ்வின் பெரும் பகு தியே யுத்த களத்துக்குள்தான் கழிந்தது என்பது நிஜம். அவர்களைப் பொறுத்தவரை குண்டுச் சத்தங்களும், கடலிலிருந்து வெடிக்கும் பீரங்கிகளின் அதிர்வும், அநாமதேயங்கள் புரியும் வேலி எரிப்பு அடாவடித்தனங்களும் அவர்களைப் பெரும் அச்சத்துக்குள் ஆழ்த்தியிருக்க இடமில்லை.

இலங்கையின் பிற இடங்களோடு ஒப்பிடுகையில் குடாநாட்டையும் கிளிநொச்சி நிர்வாக மாவட்டத்தையும் உள்ளடக்கிய யாழ்ப்பாணத் தேர்தல் மாவட்டத்தில் நேற்றைய தேர்தலில் வாக்களிப்பு வீதம் குறைவாகவே இருந்தது என்பது எதிர்பார்க்கப்பட்ட ஒன்றே. வாக்காளர் பதிவுப் பட்டியல்கள் நேர்சீர் செய்யப்படாமை, வடபகுதியைச் சேர்ந்த பெரும் எண்ணிக்கையான வாக்காளர்கள் வெளிநாடுகளுக்கும், வேறிடங்களுக்கும் சென்றுள்ளமை, பெரும் எடுப்பில் இடம்பெற்ற இடப்பெயர்வு, இடம்பெயர்ந்த மக்களின் வாக்களிப்புக்கு உரிய மாற்று ஏற்பாடுகள் செய்யப்படாமை எனப் பல்வேறு காரணங்களினால் வடக்கில் இம்முறையும் வாக்களிப்பு மிகமிகக் குறைந்த வீதமாகவே இருக்கும் என்பது நேரத்துடனேயே எதிர்பார்க்கப்பட்ட ஒன்றே.

அதுவே - எதிர்பார்த்தபடி - நடந்திருப்பதாகக் கருதப்படுகின்றது. குண்டுவெடிப்பு, பீரங்கி அதிர்வு ஆகியவை மூலம் ஏற்படுத்தப்பட்ட செயற்கைப் பதற்றமோ அல்லது இத் தேர்தலைப் பகிஷ்கரிக்கும்படி தம்பாட்டில் - விரும்பிய பெயர்களில் - சில தரப்புகள் வெளியிட்ட கடைசி நேரத் துண்டுப் பிரசுரங்களோ எந்தத் தாக்கத்தையும் உண்டுபண்ணவில்லை என்று களநிலைத் தகவல்கள் தெரிவித்தன.

தேர்தல்கள், வாக்களிப்பு விடயங்களில் அதிகாரத் தரப்புகளின் ஏவலாட்களாக மாறி சீருடைத் தரப்புகள் சட்டத்துக்கு மாறாக இழைக்கும் நடவடிக்கைகள் இலங்கையின் நீதித்துறையால் பாரதூரமாக நோக்கப்படும் என்பது இலங்கையின் சட்டத்துறையின் பட்டறிவாகும். அதைப் புரிந்து கொள்ளாமல் வடக்கிலும், பிற சில இடங்களிலும் சீருடைத் தரப்பினர் நடந்துகொள்ள முயன்றிருப்பதான தகவல்கள் கவலைக்குரியதாகும்.

2001 டிசெம்பரில் நடைபெற்ற பொதுத் தேர்தலின் போது வன்னியில் விடுதலைப் புலிகளின் கட்டுப்பாட்டுப் பிரதேசத்தைச் சேர்ந்த பொதுமக்கள் வாக்களிப்பதற்கு வவுனியாவில் கொத்தணி வாக்குச் சாவடிகள் அமைக்கப்பட்டிருந்தன. ஆனால் டிசம்பர் 5ஆம் திகதி - வாக்களிப்புத் தினத்தன்று - அந்த மக்கள் அங்கிருந்து வாக்குச்சாவடிகளுக்குச் சென்று வாக்களிப்பதைத் தடுக்கும் விதத்தில் தாண்டிக்குளம் ஊடான போக்குவரத்துப் பாதையை இராணுவம் மூடியது. இதற்காகப் பின்னர் ஐந்து வாக்காளர்கள் உயர்நீதிமன்றத்தில் வழக்குத் தொடர்ந்தனர். அவர்களின் விண்ணப்பத்தை ஏற்றுக் கொண்ட உயர்நீதிமன்றம், இராணுவத்தின் அந்த நடவடிக்கைக்காக அப்போதைய இராணுவத் தளபதியைக் கடுமையாகக் கண்டித்ததுடன் மனுதாரர் கள் ஐவருக்கும் இராணுவத் தளபதி தமது சொந்தப் பணத்திலிருந்து தலா ஐம்பதினாயிரம் ரூபா வீதம் மொத்தம் இரண்டரை லட்சம் ரூபா நஷ்டஈடு செலுத்த வேண்டும் என்றும் உத்தரவிட்டது.

அன்று ஆட்சியில் - அதிகாரத்தில் - இருந்த ஜெனரல் அனுருத்த ரத்வத்தையின் இசைவுக்கு ஏற்ப - சட்டத்துக்கு முரணாக - நீதி, நியாயத்துக்கு மாறாக - நடந்து கொண்டமைக்காக அப்போதைய இராணுவத் தளபதி ஜெனரல் லயனல் பலகல்ல தண்டிக்கப்பட்டார். அத்தண்டனைக்குரிய குற்றச்சாட்டு - வாக்காளர்களின் வாக்குரிமையைத் தடுத்த செயல் - மனித உரிமை மீறல் விவகாரமாக அர்த்தப்படுத்தப்பட்டதனால் பாவம் ஜெனரல் பலகல்ல, தமது இராணுவப் பதவி ஓய்வுக்குப் பின்னர் இராஜதந்திரப் பதவி எதையும் பெற்றுக்கொள்ளத் தகுதி இல்லாதவராக - சர்வதேசத் தரப்புகளால் ஒதுக்கப்பட்டவராக - பொது வாழ்விலிருந்து நீங்கி அஞ்ஞாத வாசம் செய்பவராக - தனித்து விடப்பட்டார். நாட்டின் இராணுவத் தளபதிப் பதவிநிலையிலிருந்து ஓய்வு பெறும் ஒவ்வொருவரும் அதன் பின்னர் கௌரவமான இராஜதந்திரப் பதவிக்குச் செல்லும்போது ஜெனரல் பலகல்ல மட்டும் அதைப் பெற இயலாமல் ஒதுங்கியமையின் பின்புலம் இதுதான்.

இத்தகைய அனுபவத்தின் பின்னரும் படைத்தரப்பினர் - சீருடையினர் - தேர்தலை ஒட்டிய அரசியல் வாதிகளின் 'சித்து' விளையாட்டுக்குத் தங்களைக் கருவிகளாக்கிக்கொண்டு ஏவல் செய்ய முன்வருகின்றமை இலங்கையின் துரதிஷ்டமின்றி வேறில்லை.

எப்டியோ யார் வென்றாலும் யார் தோற்றாலும் ஜனாதிபதித் தேர்தல் ஒப்பேறியிருப்பது வரவேற்கப்பட வேண்டியதே.

# பிரான்பற்று தொழிற்பயிற்சி நிலையத்தின் கட்டடப் பணிகள் விரைவில் பூர்த்தியாகும்

பண்டத்தரிப்பு, ஜன.27

சண்டிலிப்பாய் பிரதேச செயலகத்தினால் பிரான்பற்றில் அமைக்கப்பட்டிருந்த தொழிற்பயிற்சி நிலையத்தின் இரண்டாவது மாடிக் கட்டடத்தின் வேலைகள் கட்டடத்திணைக்களத்தின் மேற்பார்வையில் விரைவில் பூர்த்தியாக்கப்படவுள்ளது.

இரண்டாவது மாடிக் கட்டடப் பணிக்காக 7.5 மில்லியன் ரூபா நிதி கடந்த வருட பிற்பகுதியில் ஒதுக்கப்பட்டிருந்தது.

இந்தக் கட்டடத்தின் கீழ் தளக் கட்டடப் பணிக்காக உலகக் கனேடிய பல்கலைக்கழக அமைப்பு 2008 ஆம் ஆண்டு 7 மில்லியன் ரூபாவை வழங்கியிருந்தமை குறிப்பிடத்தக்தாகும்.

இக் கட்டடத்தின் தண்ணீர் தாங்கி வேலைகள் பூர்த்தியானதும் தொழிற்பயிற்சி நிலையம் ஆரம்பிக்கப்படவுள்ளது. இத் தொழிற்பயிற்சி நிலையமானது யாழ்.மாவட்டத்தில் சகல வசதிகளையும் கொண்ட தொழிற்பயிற்சி நிலையமாக அமையவுள்ளதாகவும் தெரிவிக்கப்பட்டது. (50-130)

## மாவைக் கந்தன் ஆலய தைப்பூசத் திருவிழா

யாழ்ப்பாணம், ஜன.27

மாவிட்டபுரம் கந்தசுவாமி ஆலயத்தில் தைப்பூசத் திருவிழா எதிர்வரும் 30 ஆம் திகதி சனிக்கிழமை சிறப்பாக நடைபெற ஏற்பாடுகள் செய்யப்பட்டுள்ளன.

அன்று காலை 8 மணிக்கு ஸ்கந்தப் பெருமானுக்கு ஸ்நபனாபிஷேகம் நடைபெற்று காலைச்சந்திப் பூசைகளோடு திரு நடனமும் இடம்பெறும். உச்சிக்காலப் பூசையின் பின்னர் மகேஸ்வர பூசைக்கு ஏற்பாடாகியுள்ளது.

மாவைக்கந்தன் ஆலயத்துக்கு இப் போது எவ்வித கஷ்டங்களோ தொல்லைகளோ இல்லாமல், நேரே தமக்குரியவாகனங்களில் அடியார்கள் வந்து தரிசிக்க முடியும் என்று ஆலய ஆதீன கர்த்தா மஹாராஜஸ்ரீ து.ஷண்முகநாதக் குருக்கள் தெரிவித்தார். ஆலயம்வரை போக்குவரத்து வசதிகளும் உண்டு என்று அவர் கூறினார். (அ)

## ஜனாதிபதித் தேர்தல் வாக்களிப்பில் ஆர்வம் காட்டிய யாழ்ப்பாண முதியோர்

யாழ்ப்பாணம், ஜன.27

நேற்று இடம்பெற்ற ஜனாதிபதித் தேர்தலின் போது யாழ். குடாநாட்டில் முதியோர்கள் அதிக எண்ணிக்கையில் வாக்களிப்பதில் ஆர்வம் காட்டியதை அவதானிக்க முடிந்தது.

வயோதிபர்கள் ஒட்டோ மற்றும் வாகனங்களில் சென்று வாக்களித்து விட்டு மகிழ்ச்சியுடன் சென்றதைக் காணமுடிந்தது.

கடந்த காலங்களில் இடம்பெற்ற தேர்தல்களில் முதியோர்கள் இவ்வாறு அக்கறை காட்டாத போதும் இம்முறை ஜனாதிபதித் தேர்தலில் அவர்கள் அதிக அக்கறை காட்டி வாக்களிப்பில் ஈடுபட்டதாக வயோதிபர் ஒருவர்கூறினார்.

## தடைச்சோதனை இன்மையால் வாகனங்கள் இலகுவாகப் பயணம்

கைதடி, ஜன.27

கொழும்பிலிருந்து பொருள்களைக் கொண்டுவரும் வாகனங்கள் யாவும் கடந்த வாரம் தொடக்கம் நேரடியாகவே யாழ். நகருக்குள் உள்நுழைவதற்கு அனுமதிக்கப்பட்டுள்ளதாக அறிவிக்கப்பட்டுள்ளது.

கடந்த வருடம் ஏ-9 பாதை திறக்கப்பட்டதன் பின்னர் யாழ்ப்பாணத்திற்கென கொழும்பு மற்றும் பிற இடங்களிலிருந்து வரும் பொருள்கள் யாவும் நாவற்குழி அரச உணவுக் களஞ்சியத்தில் வைத்து சோதனை செய்யப்பட்ட பின்னரே உள்ளே வர அனுமதிக்கப்பட்டது. அதே போல் இங்கிருந்து வெளிமாவட்டங்களுக்குக் கொண்டு செல்லப்படும் பொருள்கஞம் இவ்வாறே சோதனை செய்யப்பட்டு கொண்டுசெல்ல அனுமதிக்கப்பட்டன. இதனால் அரச உணவுக் களஞ்சியப் பகுதியில் போக்குவரத்து நெரிசல் அடிக்கடி ஏற்பட்டு வந்தது.

இந்த நிலையில் கடந்த வாரம் தொடக்கம் இக்கட்டுப்பாடுகள் தளர்த்தப்பட்டு வாகனங்கள் யாவும் நேரடியாகவே உரிய இடங்களுக்குச் செல்வதற்கான அனுமதிகள் வழங்கப்பட்டதனால் வானங்கள் யாவும் இலகுவாகப் பயணம் செய்வதனை அவதானிக்க முடிகின்றது. (ரி-228)

# சுனாமியால் பாதிப்புக்குள்ளான சிறார்களுக்கு நிதிஉதவி வழங்கல்

யாழ்ப்பாணம், ஜன.27

சுனாமியால் பாதிக்கப்பட்ட பிரதேசங்களை மீள் புனரமைக்கும் திட்டத்தின் கீழ் ஆழிப்பேரலையால் பாதிக்கப்பட்ட சிறார்களுக்கான கொடுப்பனவுகளை வழங்கும் வைபவம் இலங்கை வங்கியின் உதவிப் பொது முகாமையாளர் காரியாலயத்தில் அண்மையில் இடம்பெற்றது.

இலங்கை வங்கியின் வடபிராந்திய உதவிப்பொது முகாமையாளர் என்.சிவரட்ணம் தலைமையில் நடைபெற்ற இந்த நிகழ்வில் பிரதம விருந்தினராக நீதி மற்றும் சட்ட மறுசீரமைப்பு அமைச்சின் செயலாளர் சுகத் கே.கம்லத் கலந்துகொண்டார். சிறப்பு விருந்தினர்களாக யாழ்.மேலதிக அரச அதிபர் திருமதி ரூபினி வரதலிங்கம், திட்ட ஆலோசகர்களான காமினி திஸநாயக்க, சுமிதா ராஜபக்ஷ, திட்டமுகாமைத்துவ அலுவலர் சந்திமா அம்பேபிட்டிய, நீதிமற்றும் சட்டமறுசீரமைப்பு அமைச்சின் உதவிச் செயலர் ஏ.கே.டி.டி.டி. அறந்தர, வடக்கு கிழக்கின் இணைப்பாளர் சுகுமாரி சிதம்பரப்பிள்ளை, யாழ். மாவட்ட இணைப்பாளர் விக்னராஜா சஞ்ஜேந்திரா ஆகியோரும் கலந்து கொண்டனர்.

இதில் ஆசிய அபிவிருத்தி வங்கியின் நிதி உதவியுடன் தேசிய சிறுவர் பாதுகாப்பு அதிகார சபை மற்றும் நீதி மற்றும் சட்ட மறுசீரமைப்பு அமைச்சு ஆகியவற்றின் அனுசரணையுடன் நடத்தப்பட்ட இந்த வைபவத்தில் இலங்கை வங்கியில் பணத்தை வைப்புச்செய்யப்பட்ட கணக்கின் கையேடுகளும் மற்றும் வங்கியின் இலச்சினை பொறிக்கப்பட்ட கற்றல் உபகரணங்களும் வழங்கப்பட்டன.

இதில் உரையாற்றிய அமைச்சின் செயலாளர் சுகத கே.கம்லத் தெரிவிக்கையில், வடக்கு கிழக்கில் வாழும் சுனாமியால் பாதிக்கப்பட்ட சிறார்களைப்பார்க்கும் போது மிகவும் கவலையாக உள்ளது. இனிமேலும் இவ்வாறானதொரு சம்பவம் நிகழக் கூடாது. எமது அமைச்சு இவர்களுக்கான உதவிகளை நிதியாக மட்டுமல்ல வெவ்வேறு விதத்தில் வழங்கும் என்றார்.

அத்துடன் இந்தச் சந்தர்ப்பத்தை வழங்கிய இலங்கை வங்கியின் உதவிப்பொதுமுகாமையாளர் என்.சிவரட்ணம் தலைமையிலான குழுவினரிற்கும் தனது நன்றியைத் தெரிவித்துக் கொண்டார்.

இதில் சிறப்பு விருந்தினராகக் கலந்துகொண்ட மேலதிக அரச அதிபர் திருமதி ரூபினி வரதலிங்கம் உரையாற்றுகையில் ஆழிப்பேரலை அனர்த்தத்தினால் பாதிக்கப்பட்ட மற்றும் பெற்றோரை இழந்த சிறுவர்கள் தமது கல்வியை இடை நடுவில் நிறுத்தி விடாது தொடரவேண்டும் என்று கேட்டுக்கொண்டார்.

இதில் சுமார் 124சிறார்களுக்கு பத்தாயிரம் ரூபா வைப்பிலிடப்பட்ட வங்கிப்புத்தகங்களும் வழங்கப்பட்டன. (04-16)

## நகுலேஸ்வரர் ஆலய சகஸ்ர சங்காபிஷேகம்

யாழ்ப்பாணம், ஜன.27

கீரிமலை நகுலேஸ்வரம் ஸ்ரீ நகுலாம்பிகா சமேத நகுலேஸ்வர ஆலய நவோத்தர சகஸ்ர சங்காபிஷேகம் நாளை வியாழக்கிழமை நடைபெறவுள்ளது.

சங்காபிஷேகத்திற்கான பூர்வாங்க கிரியைகள் இன்று புதன்கிழமை ஆரம்பமாகி இடம்பெறும்.

விசேடமாக செதுக்கப்பட்ட ரிஷப வாகனம் இளவாலை ஒல்லுடை ஞானவைரவர் ஆலயத்தில் இருந்து ஊர்வலமாக ஆலயத்திற்கு கொண்டு வரப்படவுள்ளது.

அன்றையதினம் அன்னதான நிகழ்வும் இடம்பெறும். (50-224)

## நாளை

| | |
|---|---|
| தை 15 | 28.01.2010 |
| | வியாழக்கிழமை |
| திதி: | திரயோதசி |
| | பி.ப. 05.21 வரை |
| நட்சத்திரம்: | திருவாதிரை |
| | பி.ப. 4.39 வரை |
| சுபநேரம் : | 08.06-09.36 வரை |
| ராகுகாலம்: | 02.06-03.36 வரை |
| [illegible] | |

## உணவு விவசாய ஸ்தாபனத்தின் அனுசரணையுடன் விவசாய மேம்பாட்டு உதவிகள் வழங்கப்படுகின்றன

யாழ்ப்பாணம், ஜன.27

உணவு விவசாய ஸ்தாபனத்தின் அனுசரணையுடன்விவசாயத்திணைக்களத்துடன் இணைந்த வகையில் இடம்பெயர்ந்த விவசாயிகளுக்கு விவசாய மேம்பாட்டு உதவிகள் வழங்கப்படவுள்ளன.

வலி.தென்மேற்கு, சண்டிலிப்பாய் கமலநல சேவைகள் நிலைய விவசாயப் போதனாசிரியர் திருமதி பி.மணிவண்ணன் இதற்கான துரித நடவடிக்கையை எடுத்துள்ளார்.

வலி.தென்மேற்கில் தெரிவு செய்யப்பட்ட 140 இடம்பெயர்ந்த விவசாயிகளுக்கு துரித விவசாய மேற்பாட்டுத் திட்டத்தின் கீழ் இந்த உதவிகள் யாழ்.மாவட்ட தேச வளவிவசாயிகள் சம்மேளனத் தலைவர் க.முதலியார் (ச.நீ) தலைமையில் உதவிகள் இம் மாத முற்பகுதியில் இருந்து வழங்கப்பட்டு வருகின்றன.

மானிப்பாய் மேற்கில் 20பயனாளிகளுக்கும், சண்டிலிப்பாய் மேற்கில் 20பயனாளிகளுக்கும் 10கிலோ வீதம் நிலக்கடலை வழங்கப்படவுள்ளது.

பிரான்பற்று, மாதகல், பெரிய விளான் பகுதிகளில் 50 பயனாளிகளுக்கு 3 கிலோ பயறு வீதம் வழங்கப்படுகின்றது.

பண்டத்தரிப்பு, முள்ளானை, மாதகல் ஆகிய பிரதேச விவசாயிகள் 50பேருக்கு 2கிலோ சோளம் செய்கைக்காகவழங்கப்பட்டு வருகின்றது.

ஒவ்வொரு விவசாயிக்கும் 5 கிலோ யூரியா, 10கிலோ ரி.எஸ்.பி, 5கிலோ எம்.ஒ.பி என்பன வழங்கப்படும் எனவும் விவசாய போதனாசிரியர் திருமதி பி.மணிவண்ணன் அறிவித்துள்ளார்.

உரிய காலத்தில் பயன்பெறாத விவசாயிகளுக்கு வேறு உதவிகள் வழங்கப்படமாட்டாது என யாழ். மாவட்ட தேசவள விவசாயிகள் சம்மேளனத் தலைவர் க.முதலியார் அறிவித்துள்ளார். (04-302)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## கடந்த வருடத்துக்கான வரி அனுமதிப்பத்திரங்கள் வழங்கப்பட்டுள்ளன

வலி.தென் மேற்கு, சண்டிலிப்பாய் பிரதேச செயலகத்தில் கடந்த 2009 ஆம் ஆண்டுக்கான வரி அனுமதிப் பத்திரங்களை 4, 288 பேர் பெற் றுள்ளனர்.

இன்னும் சுமார் 1,000 பேர் இந்த அனுமதிப்பத்திரங்களைப் பெற்றுக் கொள்ளவில்லை. இப் பிரிவில் 6,200 வாகனங்களில் 7 வாகனங்கள் மட்டும் பாவிக்க முடியாத நிலையில் உள்ள தாக செயலக அதிகாரி ஒருவர் தெரிவித்துள்ளார். (ஒ-100)


## உளவளத்துணைச் சேவை

**உளவளத்துணை என்றால் ...............**

நிபுணத்துவம் பெற்ற உளவளத்துணையாளர் ஒருவருடன் தனிநபர்களும் தம்பதியினரும் ஏனைய சிறுகுழுக்களும் குறித்த பிரச்சினைகளை மனம் திறந்து உரையாடுவதன் மூலம்....

அந்தச் சவால்களை எதிர்கொள்ளும் முறைகளைத் தெரிந்து கொள்வதற்கும்.

* அதற்கேற்ற வகையில் தங்களை ஒழுங்குபடுத்திக்கொள்வதற்கும்,
* பதற்றம், பதடளிப்பு போன்ற நிலைமைகளைத் தவிர்ப்பதற்கும்,
* ஆழ்மன வடுக்களை இனங்கண்டு கொள்வதற்கும். இலகுபடுத்தப்படும்.

**இரகசியம் காத்தல்**

தொழில்சார் கோட்பாடுகளுக்கு அமைய உங்களது சகல விடயங்களும் இரகசியாமகப் பேணப்படும்.

**எவ்வாறான பிரச்சினைகளுக்கு...**

நபருக்கு நபர் வேறுபடக்கூடிய உணர்வுபூர்வமான மற்றும் திருமண/உறவு முறைச்சிக்கல்கள், மன அழுத்தம், பதகளிப்பு,பதற்றம், மன வடுக் களால் ஏற்படும் பிறழ்வுகள் தாழ்ந்த சுயமதிப்பீடு, குடும்பப் பிரச்சினைகள், வேலைப்பளுவினால் ஏற்படக்கூடிய நெருக்கீடுகள், பயங்கள், கோபம், குற்ற உணர்வு மற்றும் ஏனைய உளநலப் பிரச்சினைகள்.

**உளவளத்துணையாளராக நான்....**

உங்கள் உணர்வுகளை உங்களுக்கு தெரிய வைப்பதினூடு, உங்கள் பிரச்சினைகளை நீங்களே தீர்த்துக் கொள்வதற்கு வழிகாட்டுவேன்.

* உங்களுக்கு ஏதும் மனக்கவலைகள் இருத்தல்.
* நீங்கள் மன அழுத்தத்திற்கு உட்பட்டிருத்தல்.
* வேறு ஒருவரால் நீங்கள் நியாயமற்ற முறையில் சுரண்டப்படுவதாக உணர்ந்து கொண்டிருத்தல்.
* உங்கள் இயலாமை காரணமாக அல்லது மன நலப்பிரச்சினை ஒன்றின் காரணமாகக்கோபப்படல் அல்லது துக்கப்படல்.
* உங்களைச் சுயமாகப் பராமரிப்பது தொடர்பான விடயங்களை புதிதாகத்தெரிந்துகொள்ள நினைத்தல்.
* நீங்கள் உங்களை மேம்படுத்த நினைத்தல்.
* நீங்கள் உடல்உள உளைச்சல்களுக்கு ஆளாகியிருத்தல்.
* நீங்கள் உங்கள்விடயங்களைவெளிகொணரத்தயங்கிக்கொண்டிருத்தல்.

பெப்ரவரி மாதம்
4ஆம்,5ஆம் ,6ஆம், 7ஆம் திகதிகளில்
**சிவ.கஜந்தன்** (உளவளத்துணையாளர்)
(சி/563985) உன் உங்கள் நிலைமைகளை மனந்திறந்து பேசலாம்.
தொ.பே: 071-3059433, 077 8891910

**சேவைக்கட்டணம்:** அண்ணளவாக 50 நிமிடங்களைக் கொண்ட ஒவ்வொரு சந்திப்பிற்கும் ரூபா 600 அறவிடப்படும். ஒதுக்கப்பட்ட சந்திப்பு இரத்துச் செய்யப்படுமானால் சாத்தியமான நேரங்களில் பிறிதொரு சந்திப்பை ஏற்படுத்திக் கொள்ளலாம். பதிவுகளுக்கு: 021 2223533

இடம்: யாழ். நகரில் முன்னணிவைத்தியசாலையான

**NEW YARL HOSPITAL**

Reg. No. NAL/DS/828,315,PALALY Road,
Parameswara Junction, Thirunelvely.



## வேலையாள்கள் தேவை

★ சகல கணனி வேலைகளும் தெரிந்த பெண் பிள்ளைகள் தேவை.

**கடமை நேரம்: காலை 6.30 மணிமுதல் மாலை 6.30 மணிவரை**

(சுழிபுரம், வட்டுக்கோட்டை, அராலி, காரைநகர் பகுதிகளில் வசிப்பவர்கள்)

★ புடைவை வியாபாரத்தில் அனுபவமுள்ளவர்களும், பழக விரும்புபவர்களும் தேவை.

ஞாயிறு முழுநாளும், திங்கள் பி.பகலிலும் நேரில் வரவும்.

**ஞானம்ஸ் புடைவையகம்**
18 A, நவீன சந்தை, மின்சார நிலையவீதி,
யாழ்ப்பாணம். தொ.பே: 222 5679
(வி/564455)



## பாலன் மில்

தேங்காய் எண்ணெய்
நல்லெண்ணெய் } ஆலை

கொப்பறா, எள், இலுப்பைப் பருப்பு (விதை கோது உடைத்து) சூரியகாந்தி விதை போன்றவற்றை 3 கிலோ முதல் 3000 கிலோ வரை தனித் தனி இயந்திரத்தில் அரைத்து எண்ணெயாக உடன் ஊற்றித்தரப்படும். நாடவேண்டிய ஒரே இடம்.

**பாலன் மில்**
தொ.பே: 0213212624 மாவடிச் சந்தி, வட்டுக்கோட்டை.


## கலைப்பீட மாணவருக்கான அறிவித்தல்

2005/2006 கல்வியாண்டுக்குரிய கலைப்பீட பொதுக்கலை மாணவர்களுக்கான குழுப் புகைப்படம் நாளை (28.01.2010) வியாழக்கிழமை மாலை 4மணியளவில் எடுக்க உள்ளதால் அனைத்து மாணவர்களையும் தவறாது சமுகம் தருமாறு கேட்டுக்கொள்கின்றேன்.

**தலைவர்,**
**கலைப்பீட மாணவர் ஒன்றியம்,**
**யாழ்.பல்கலைக்கழகம்.** (94261)


## Computerized Accounting

New batch starts on:
06.02.2010
(10.00 a.m)

IIS
Institute of Informatics Studies
#100, Clock Tower Road, Jaffna
T.P:021 222 2831



## பெண் வேலையாள்கள்

பல்பொருள் விற்பனை நிறுவனம் ஒன்றுக்கு கல்வித் தகுதியுடையவராகவும், சுறு சுறுப்பு ஆனவராகவும், தலைமைத்துவம் உடையவராகவும், பொதுவாக நிறுவனத்தைக் கொண்டு நடத்தக் கூடியவராகவும் உள்ள பெண் வேலையாள்கள் தேவை.

ஒரு நாளுக்கு 8 மணித்தியாலயம். கிழமைக்கு 40 மணித்தியாலம். சனி, ஞாயிறு விடுமுறை நல்ல உடல் ஆரோக்கியமாகவும் உயரமாகவும் இருத்தல் வேண்டும்.9.00-4.00 உடன் நேரில் வரவும்.

தொடர்பு:
175A, சிவன்பண்ணை வீதி,
யாழ்ப்பாணம்.
(94267)



## மணமகன் தேவை

யாழ்.உயர் இந்து குலத்து டாக்டர் (MBBS) ஆக வேலை செய்து கொண்டிருக்கும் 37 வயதுடைய பெண்ணுக்கு டாக்டர், என்ஜினியர், அக்கவுண்டன் மற்றும் தகுந்த பதவி அந்தஸ்துள்ள மணமகனை எதிர் பார்க்கின்றோம்.

தொடர்பு: 0112471369
0717677750
(வி/564357)


## முதலாம் ஆண்டு நினைவஞ்சலி



திருமதி
**கலாதேவி நந்தகுமார்**
திதி: துவாதசி
தோற்றம் - 25.11.1968
மறைவு - 06.02.2009

பாசத்தின் உறைவிடமே!
பண்பின் ஒளிவிளக்கே!
அறிவின் இருப்பிடமே!
ஆண்டு ஒன்றாகியும்
ஆறவில்லை எம் மனம்
போகும் இடமெல்லாம்
- உங்கள் விம்பம்
கேட்கும் ஒலிகள் எல்லாம் உங்கள் குரல்
ஆறுதல் கிடைக்காமல் தவிக்கின்றோம்
காலங்கள் எத்தனை கடந்தாலும்
மாறாது உங்கள் நினைவலைகள்.

யாமாளை,
சுழிபுரம்.
(94656)
என்றும் நினைவுடன்,
குடும்பத்தினர்.

## 18ஆம் ஆண்டு நினைவஞ்சலி



மண்ணில் 04 ★ 05 ★ 1915
விண்ணில் 17 ★ 01 ★ 1992

**அமரர் P.M. இராசரத்தினம்**

திதி: பூர்வபக்க துவாதசி 27.01.2010
தாவடி ஸ்ரீ அம்பலவாண வேத விநாயகரின் மகா கும்பாபிஷேகம் நடைபெறும் இந்த புனித நாளில் உங்களை நினைக்கிறோம். எங்கள் குல தெய்வமாக விளங்கும் தாவடிப்பிள்ளையாரின் வழித்துணை எப்போதும் உங்களுக்கு இருக்கும். உங்கள் நினைவாக விநாயகரின் வசந்த மண்டபத்தை காணிக்கையாக்குகிறோம்.

திருமதி மகேஸ்வரி இராசரத்தினம்,
பிள்ளைகள், மருமக்கள்,
பேரப்பிள்ளைகள்.

பிள்ளையார் கோயிலடி,
தாவடி.
(C/564429)

## துயர் பகிர்கின்றோம்

எமது பாடசாலை ஆசிரியை
திருமதி சி.அம்பிகைபாகன் அவர்களது அன்புத் தாய்

**அமரர்**
**திருமதி சிவயோகம் மார்க்கண்டு**

அவர்களின் மறைவால்
துயருற்றிருக்கும் குடும்பத்தினருக்கு
எமது ஆழ்ந்த அனுதாபத்தைத்
தெரிவிப்பதோடு அன்னாரின் ஆத்மா
சாந்தியடையப் பிரார்த்திக்கின்றோம்.

ஆசிரியர் நலன்புரிச் சங்கம்,
யா/கொக்குவில் ஸ்ரீ இராமகிருஷ்ண வித்தியாசாலை,
கொக்குவில்.
(94696)


## STUDY IN UK

Colombo, நகரில் UK VISA க்களை பெற்றுக்கொடுக்க சாதனை படைத்துக்கொண்டிருக்கும் எமது நிறுவனம் யாழ்.மாணவர்கள் அனேகரின் வேண்டுகோளுக்கு இணங்க யாழ்.நகரில் கிளைக் காரியாலயம் ஒன்றை ஆரம்பித்துள்ளது.

* UK பல்கலைக்கழகங்கள், கல்லூரிகளுக்கு உடனடியாக அனுமதி பெற்றுக்கொடுக்கப்படும்
* UK VISA சம்பந்தமான இலவச ஆலோசனைகள்
* நான்கு வாரத்தில் London பயணமாக அரிய வாய்ப்பு.

### நீங்கள் ஏன் எமது நிறுவனத்தை தெரிவுசெய்யவேண்டும்

* ஆகக் கூடுதலான விசாக்களைப்பெற்றுக்கொடுத்து சாதனை படைத்துக் கொண்டிருப்பதால்
* UK யில் உள்ள பிரபல சட்டத்தரணிகளால் உங்கள் Visa Document தயாரிக்கப்படுகின்றன.
* Free IELTS Classes
* UK இல் பகுதிநேர வேலைவாய்ப்பு
* Admission within 12 hours
* Degree முடிவில் 2 வருட Work permit பெற்றுத்தரப்படும்.
* யாழ்.மாணவர்களுக்கு விசேட விசா ஏற்பாடுகள் செய்துகொடுக்கப்படுகின்றன.

University of Portsmouth | University of Hertfordshire | University of Plymouth | The City College | College of Technology London

Jaffna Office:
No:102 2/2, Laxan Plaza, Navalar Road, Jaffna.
E-mail: expojaffna@yahoo.com, Web: www.expogroup.lk
T.P: 021 7538395, 021 7538396

EXPONET Overseas Consultants

Colombo Office : No.379,1/2 Galle Road, Colombo - 06
T.P : 0117555511,12,13,14
London Office : No.56, The Gardens, Harrow Middlesex
Ha 1 4EY UK.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மக்கள் நடமாட்டம் இல்லாமையால் யாழ்.நகர் நேற்று வெறிச்சோடியது

## போக்குவரத்துச் சேவைகளும் பாதிக்கப்பட்டன

யாழ்ப்பாணம், ஜன.27

நேற்று இடம்பெற்ற ஜனாதிபதித் தேர்தலையொட்டி யாழ்.நகரப் பகுதியில் மக்கள் நடமாட்டம் மிகவும் குறைந்து காணப்பட்டது.இதனால் யாழ்.நகர் வெறிச் சோடிக் காணப்பட்டது.

தேர்தலின்போது அசம்பாவிதங்கள் எதுவும் நிகழலாம் என்ற அச்சத்தினால் மக்கள் நேற்று வாக்களித்த பின்னர் வீடு களுக்குள்ளேயே முடங்கிக் கிடந்தனர்.

நகரில் உள்ள அனேகமான வர்த்தக நிலையங்கள் திறந்திருந்தபோதும் வியா பார நடவடிக்கைகள் பெரிய அளவில் இடம்பெறவில்லை. நகரின் மத்திய பேருந்து நிலையத்திலும் ஒருசில பஸ்கள் மட்டுமே சேவையில் ஈடுபட்டன.

அனேகமான பஸ்கள் தேர்தல் கடமை யில் ஈடுபடுத்தப் பட்டிருந்தன.

பயணிகள் இன்றி பஸ்தரிப்பு நிலைய மும் வெறிச்சோடியது.

யாழ்ப்பாணத்துக் கும் வெளியிடங்க ளுக்குமான போக் குவரத்துச் சேவை களும் நேற்றுப் பாதிக்கப்பட்டிருந் தன. பயணிகள் பஸ் சேவையில் ஒருசில பஸ்கள் மட்டுமே ஈடு பட்டிருந்ததை அவ தானிக்க முடிந்தது.

இதேவேளை



யாழ். போதனா வைத் தியசாலை வெளி நோயாளர் பிரிவிலும் நேற்றுச் சிகிச்சை பெறவந்த நோயாளர்களின் எண்ணிக்கை குறைந்து காணப்பட்டது. (50-224)

## நெற் பயிர்களுக்கு கிணற்றிலிருந்து நீர் இறைக்கும் விவசாயிகள்

சண்டிலிப்பாய், ஜன.27

குடாநாட்டில் தற்போது மழை இன் மையால் நெற்பயிர்களுக்குக் கிணற்றி லிருந்து நீர் இறைப்பதில் விவசாயிகள் ஈடுபட்டுள்ளனர்.

குடாநாட்டு விவசாயிகள் பருவம ழையை நம்பியே காலபோக நெற்செய் கையில் ஈடுபட்டு வருகின்றனர்.

வலி.தென்மேற்குப் பிரதேசத்தில் இம் முறை மேட்டு நிலத்தில் செய்கை பண் ணப்பட்ட நெற்பயிர்கள் போதிய நீர் இன்றி வெப்பத்தினால் பாதிக்கப் பட்டுள்ளன. கதிர் வந்த நிலையிலிருக் கும் இப்பயிர்களுக்கு குளங்களிலிருந் தும், அருகாமையிலுள்ள கிணறுக ளிலிருந்தும் நீர் இறைப்பதில் விவசாயி கள் ஈடுபட்டுள்ளனர்.

இதேவேளை பள்ளக் காணிகளில் மேற்கொள்ளப்பட்ட நெற்செய்கை வெள்ளத்தினால் அழிந்துள்ளதாகவும் தெரிவிக்கப்பட்டது.

(50-115)

# உயரிய எண்ணங்களை ஈடேற்ற உறுதி கொண்டால் வெற்றிகள் உங்கள் வாசற்கதவைத் தேடிவரும்

## கோப்பாய் ஆசிரியர் பயிற்சிக்கலாசாலை விரிவுரையாளர் ச.லலீசன் உரை

யாழ்ப்பாணம், ஜன.27



'சிறிய வயதிலேயே உயர்ந்த எண்ணங்களை மனதில் ஏற் படுத்துங்கள். அவ்வெண்ணங் களை ஈடேற் றுவதில் உறு தியாக இருங் கள், வெற்றி கள் உங்கள் வாசற்கத வைத் தேடி வரும்'' இவ்வாறு தெரிவித்தார் கோப் பாய் ஆசிரியர் பயிற்சிக் கலாசாலையின் விரிவு ரையாளர் ச.லலீசன்.

கோப்பாய் நாவலர் தமிழ் வித்தியால யத்தின் கால்கோள் விழாவில் பிரதம விருந்தினராகக் கலந்துகொண்டு உரை யாற்றும் போது அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார். வித்தியாலய அதிபர் சாந்தி வாகீசன் தலைமையில் நடைபெற்ற நிகழ் வில் தொடர்ந்து உரையாற்றிய அவர் தெரி வித்தவை வருமாறு:

சிறுவயதில் குழந்தைகளைப் பார்த்து நீ யாராக வர விரும்புகின்றாய்? என்று கேட் பதுண்டு. அப்போது அவர்கள் சமூகத்தில் மதிக்கப்படுகின்ற உயர் தொழில்களைக் கூறுவதே ஏற்புடைய தாகும். அதைக் கேட்டு நாம் நகைக்கக் கூடாது. அந்த உயர் இலட்சியத்தை உன்னால் அடைய முடி யும் என்ற நம்பிக்கையை அவர்களுக்கு ஊட்ட வேண்டும்.

நாம் சிறுவர்களாக இருந்த காலத்தில் பாடசாலைக்குச் சென்ற முதல் நாளில் அழுகையைச் சந்திப்பதே பெரும்பாலும் வழக்கமாக இருந்தது. ஆனால் இப்போ தெல்லாம் பிள்ளைகள் முதல் நாளிலேயே சிரித்த முகத்தோடு செயற்படுகிறார்கள்.

கற்றல், கற்பித்தல் அணுகுமுறையில் ஏற்பட்ட மாற்றமே இதற்கான பிரதான கார ணமாகும்.

முதன்மை நிலை ஒன்றில் அனுமதி பெற்ற பிள்ளைகள் எழுத்து வேலைகளில் ஈடுபட வேண்டும் என்றே பெரும்பாலான பெற்றோர்கள் எதிர்பார்க்கின்றனர். அது தவறான சிந்தனையாகும். தரம் 1,2 வகுப் புக்களில் விளையாட்டு முறை மூலமான கல்விக்கே முக்கியத்துவம் வழங்கப்படு கின்றது. தரம் 5 ஆம் வகுப்பிலேயே எழுத்து வேலைக்கு அதிக முக்கியத்துவம் வழங் கப்படுகின்றது. எழுத்து வேலைக்கு அதிக முக்கியத்துவத்தை எதிர்பார்த்து தரம் ஒன்று வகுப்பிலேயே தனியார் நிறுவ னத்தை நாடச் செய்யும் பெற்றோர் பலர் உள்ளனர். ஆரம்பக்கல்வி வகுப்புக்களை நடத்தும் தனியார் நிறுவனங்களில் இத் துறைசார்ந்த ஆசிரியர்கள் குறைவாகவே உள்ளனர்.

அங்கு கற்பித்தலில் ஈடுபடுவோர் பரீட் சையை மையப்படுத்திய கற்றலுக்கே முதன்மை வழங்குகின்றனர். ஆனால் பாடசாலையில் தேர்ச்சியை மையப்படுத் தியே கல்வி வழங்கப்படுகின்றது. இதனால் தனியார் கல்வி நிறுவனக் கற்கைக்கும் பாடசாலை முறைக்கற்கைக்கும் முரண் பாடு ஏற்பட வாய்ப்பு உண்டாகின்றது. பெற்றோர் இவை பற்றிய பூரண தெளிவைக் கொண்டிருக்க வேண்டும்.

சுயமாகச் சிந்திக்கக் கூடிய படைப்பாற் றல் திறன்மிக்க மாணவர்களை உருவாக்க பாடசாலைக் கல்வியின் கலைத்திட்ட ஒழுங் கமைப்பு உள்ளது என்றார். (04-72)

## வயலில் வேலை செய்தவர் பாம்புக் கடிக்கு இலக்கானார்

யாழ்ப்பாணம், ஜன.27

வயலில் வேலை செய்துகொண்டு நின்றவரை பாம்பு கடித்தது.

அண்மையில் மட்டுவில் பகுதியில் இடம்பெற்ற இந்தச் சம்பவத்தில் மட்டு வில் வடக்கைச் சேர்ந்த வேலன் தர்மராசா (வயது-45) என்பவரே பாம்புக்கடிக்கு இலக்கானார். இவர் சாவகச்சேரி வைத்திய சாலையில் சேர்க்கப்பட்டு மேலதிக சிகிச் சைக்காக அம்புலன்ஸ் மூலம் யாழ். போதனா வைத்தியசாலைக்கு மாற்றப் பட்டுள்ளார். (04-78)

# இன்றைய நாள் உங்களுக்கு எப்படி?

தருபவர்: வித்யா

### மேடம்



சிறிய விடயம் ஒன்றுக்காகப் பெரிய அளவில் கவலைப்படுவீர்கள். முன்பின் தெரியாதவர்களை நம்பிச் சில வேலைகளை ஒப்படைக்கலாம். திடீர் செலவு களைச் சமாளிக்க நண்பர்களிடம் கைமாற்றுப் பெறலாம். திட்டமிட்ட பணிகளில் தடை தாமதம் ஏற்படலாம். அவசரமாக முடிக்க வேண்டிய வேலை ஒன்றால் அவதிப்படலாம்.

### இடபம்



நீங்கள் எதிர்பாராத ஒருவர் உங்கள் வீடு தேடி வரலாம். வீட்டை அழகாக வைத்திருப்பதில் அக்கறை காட்டுவீர்கள். காலை நேரத்தில் கனிவான செய்திகளைக் கேட்கலாம். எடுத்த காரியத்தை முடிக்க நண்பர்கள் வழியில் உதவிகள் கிடைக்கலாம். எதிர்ப்புகள், போட்டிகளை வெற்றிகரமாகச் சமாளிப்பீர்கள்.

### மிதுனம்



சில விஷயங்களில் மற்றவர்கள் யோசனையைக் கேட்காமல் தன்னிச் சையாக செயற்படுவீர்கள். சிலரிடம் கோபமாகப் பேச நேரிடலாம். தொலை பேசி வழியில் முக்கியமான செய்திகளைக் கேட்கலாம். சிலரிடம் நீங்கள் கடன் வாங்கலாம், அல்லது சிலருக்கு கடன் கொடுக்கலாம். வீண் செலவுகள் நேரும்.

### கடகம்



நண்பர்களின் அனுசரணையால் திட்டமிட்ட காரியத்தில் வெற்றி கிடைக்கும். வெளியூர்ப் பயணங்கள் செல்லலாம். புதிய திட்டங்கள் தீட்டி, செயற்படுத்த முற்படுவீர்கள். பிள்ளைகள் விஷயத்தில் அதிக பரி வோடு நடந்து கொள்வீர்கள். உங்களை விட வயதில் பெரியவர்கள் சிலருக்கு உதவி செய்வீர்கள். பொருள்கள் வந்து சேரும்

### சிங்கம்



நண்பர்களின் அனுசரணையால் திட்டமிட்ட காரியத்தில் வெற்றி கிடைக்கும். வெளியூர்ப் பயணங்கள் செல்லலாம். புதிய திட்டங்கள் தீட்டி, செயற்படுத்த முற் படுவீர்கள். பிள்ளைகள் விஷயத்தில் அதிக பரிவோடு நடந்து கொள் வீர்கள். உங்களை விட வயதில் பெரியவர்கள் சிலருக்கு உதவி செய்வீர்கள். பொருள்கள் வந்து சேரும்.

### கன்னி



குடும்பத்திற்குத் தேவையான பொருள்களை வாங்கிக் கொடுக்கலாம். கணவன், மனைவி இடையே சிறு மனஸ்தாபம் ஏற்படலாம். முடிந்து விட்டதாக நினைத்த பிரச்சினை ஒன்று மீண்டும் தலை தூக்கலாம். உங்களின் பிரச்சினை ஒன்றை நண்பர்கள் அல்லது சக ஊழியர்களிடம் சொல்லி ஆலோசனை கேட்பீர்கள்.

### துலாம்



கடன் பிரச்சினைகளால் கவலை அடையலாம். போட்டி, பொறாமை களால் அவதிகளுக்கு ஆட்படலாம். எதிலும் வேகத்தைத் தவிர்த்து நிதானமாகச் செயற்பட வேண்டும். குடும்ப உறுப்பினர்கள் உங்களைப் புரிந்து கொள்ளாமல் ஏட்டிக்குப் போட்டியாக செயற்படலாம். மதிப்பு, மரியாதை பாதிக்கலாம்.

### விருச்சிகம்



கூட்டு முயற்சிகளில் வெற்றி கிடைக்கும். பிள்ளைகளை, குடும்பத்தி னரைச் சந்தோஷப்படுத்துவதில் அக்கறை காட்டுவீர்கள். சிலர் உங்களுக்கு நல்ல யோசனை சொல்லலாம். அவசரப்பட்டு எதிலும் முடிவுகள் எடுக்க வேண்டாம். தம்பதியர் இடையே நெருக்கம் அதிகரிக்கும். சுகபோகங்களில் நாட்டம் செல்லும்.

### தனுசு



அயலாரின் பாராட்டுக்களைப் பெறுவீர்கள். உறவினர்கள் வகையில் ஏற்பட்ட மனஸ்தாபம் தீர்ந்து பாசம் அதிகரிக்கும். சுயநலமின்றி மற்றவர்களுக்காகச் சில காரியங்களைச் செய்து கொடுப்பீர்கள். தொழில் ரீதியாக உங்களின் செல்வாக்கு அதிகரிக்கும். மற்றவர்கள் செலவில் உங்களின் தேவைகள் நிறைவேறலாம்.

### மகரம்



திட்டமிட்ட வேலைகளில் சில மாற்றங்களைச் செய்யலாம். மற்றவர்கள் புரிந்து கொள்ளாத வகையில் சில விடயங்களில் செயல்படுவீர்கள். உங்களின் வேலை ஒன்றுக்காக மற்றவர் களையும் கூட்டிக் கொண்டு அலைவீர்கள். நண்பர்களுடன் கொண்டாட்டங்களில் பங்கேற்கலாம்.



ஒரு முறைக்குப் பலமுறை யோசித்துச் செய்ய வேண்டும். போக்கு வரத்துகளால் அனுகூலம் உண்டு. வர்த்தர்களுக்கு கொடுக்கல் வாங்கலில் சுமூகமான நிலைமை காணப்படும். சகோதரர்கள் கேட்ட உதவிகளை மறுக்காமல் செய் வீர்கள். உறவினர் ஒருவர் உங்களை நம்பி முக்கிய வேலைகளை ஒப்படைக்கலாம்.

### மீனம்



கனிவான பேச்சுக்களால் காரியம் சாதிப்பீர்கள். நண்பர்கள் மூலம் நல்ல வாய்ப்புகள் தேடி வரலாம். விடா முயற்சி ஒன்றுக்கு வெற்றி கிடைக்கும். பெண்கள், சகோதரிகள் வழிகளில் உதவிகள் கிடைக்கும். சக ஊழியர்கள் சிலருக்கு நல்ல ஆலோசனைகள் சொல்வீர்கள். மனதில் உற்சாகம் குடிகொள்ளும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# திறப்பு விழா

இன்று [27.01.2010] புதன்கிழமை
காலை 7.00 மணிக்கு எமது
புதிய காட்சி அறை மங்களகரமாகத்
திறந்து வைக்கப்படுகின்றது.

## சிவசக்தி

மிதிவண்டிகள், மிதிவண்டி உதிரிப்பாகங்கள்,
CALTEX ஒயில், மின்சார உபகரணங்கள், மின்சார இணைப்புப்
பொருள்கள், A.C.L. கேபிள்கள், கட்டப் பொருள்கள் மற்றும் எலக்ரோனிக்
பொருள்களை எம்மிடம் பெற்றுக் கொள்ளலாம்.

01,10 சாவகச்சேரி. Email: sivashaktheecyclecntre 1@gmail.com



## மீண்டும் பெப்ரவரி 04 இல் ஆரம்பமாகிறது

G.A.S கணக்கீட்டுக் கற்கைகள் குழாம் G.A.S
Group of Accounting Studies
(உயர்கல்விக்கான தனியார் நிறுவனம்)
குளப்பிட்டிச் சந்தி அருகாமை, கொக்குவில்.
உயர்கல்வி மாணவர்களுக்கான,
H.N.D.A, H.N.D.M, EX.B.Com, மற்றும் AAT,
வங்கியியல், CAB I/II, க.பொ.த (உ/த)-வர்த்தகப் பிரிவு கற்கைகளுக்கான தமிழ் / ஆங்கில மொழிமூல விரிவுரைகள் சனி, ஞாயிறு மற்றும் விடுமுறை தினங்களிலும், வசதிக்கேற்ப வார நாள்களிலும் நடைபெறுகின்றன.

விரிவுரையாளர்கள்,
1. க.பிரதீபன் - (SL.Au.S. கணக்காய்வு அத்தியட்சகர், முன்னைநாள் விரிவுரையாளர்)
2. பே.சசிதரன் - (H.N.Dip. in. ACC)- Prog/Asst.
3. ச.பிரதீபன் - (H.N.Dip. in. ACC)-ஆசிரியர்.

குறிப்பு:
1. மாணவர் அனுமதிகள் பெப்ரவரி 04 வரை சனி, ஞாயிறு தினங்களில் மு.ப.9.00-12.00 வரை ஏற்கப்படும்.
2. ஏற்கனவே பதிவுசெய்த மாணவர்களுக்கு பதிவுக்கட்டணம் அறவிடப்படமாட்டாது.

மேலதிக விபரங்களுக்கு:
தொ.பே:- 0778448709

"உங்கள் நிறைவே எங்கள் இலட்சியம்"

நிர்வாகம்
G.A.S (94274)





edexcel INTERNATIONAL
BTEC HND
New Batches start on:
28/01/2010
at
10.00 a.m

HND in Computing
HND in Quantity Surveying
HND in Civil Engineerig
HND in Business Management

உங்கள்
பதிவுகளுக்கு முந்திக்கொள்ளுங்கள்

IIS CITY CAMPUS
200,Sivan pannai Road, Jaffna
T.P:021 222 8060 Fax: 021 222 6933
Web:iiscitycampus.com



## சந்திரகாந்தன் திருமண சேவை

அரசபதிவு: VW/FIN/R/I/12/2009
திருப்பதியாகவும், துரிதமாகவும் செயல்படும் ஸ்தாபனம்.
தொ.பே: 0775081756, 0215680063
தொல்புரம் மத்தி, சுழிபுரம். எஸ்.ஆனந்தி, இயக்குநர். ஒவ்விஸ் [சித்தன்கேணி, சிவன் கோயிலடி]



## இறைச்சிக் கோழி விற்பனை

புறொயிலர், கல்பேட்ஸ், முட்டை என்பன மலிவான விலையில் தினமும் பெற்றுக்கொள்ளலாம், புறொய்லர் மொத்தமாகவும் விற்பனை செய்யப்படும்.
தொடர்பு: மல்ரிமாம் சென்ரர்
61, இராமநாதன் வீதி,
நாச்சிமார்கோயிலடி. தொ.பே: 0217912783


## யாழ்.நீதிவான் நீதிமன்றில் இன்று நடைபெறவிருந்த வழக்குகள் ஒத்திவைப்பு

யாழ்ப்பாணம்.ஜன.27

யாழ்ப்பாணம் நீதிவான் நீதிமன்றத்தில் இன்று புதன்கிழமை நடைபெறவிருந்த வழக்குகள் அனைத்தும் ஒத்திவைக்கப்பட்டுள்ளதாகவும், அந்த வழக்குகள் எதிர் வரும் பெப்ரவரி 24ஆம் திகதி நடைபெறும் எனவும் நீதிமன்றம் பதிவாளர் அறிவித்துள்ளார். (50)

## நெல் அறுவடை ஆரம்பம்

மாதகல், சில்லாலை, பண்டத்தரிப்பு, வடலியடைப்பு கிராமங்களில் நெல்அறுவடை ஆரம்பிக்கப்பட்டுள்ளது. இதனால் அறுவடை செய்யும் கூலியாள்களுக்குத் தட்டுப்பாடு ஏற்பட்டுள்ளது. கடந்த கால போகம் சீரான மழையினால் இம் முறை அதிக விளைச்சல் கிடைத்துள்ளதாக விவசாயிகள் தெரிவிக்கின்றனர். இதனால் நெல் கொள்வனவு செய்யும் வியாபாரிகளும் வயல்களை நாடி வருவதைக் காணக் கூடியதாக உள்ளது. (50-130)

## ஆட்டுக் கடாவைத் திருடி இறைச்சிக்காக வெட்டிய திருடர்கள்

இரவு வேளையில் ஆட்டுப்பட்டியில் நின்ற கடா ஆட்டைத் திருடிய திருடர்கள் அந்த ஆட்டை ஓரிடத்தில் வைத்து இறைச்சிக்காக வெட்டிச் சென்றுள்ளனர்.

இந்தச் சம்பவம் நீர்வேலி தெற்கு பகுதியில் அண்மையில் இடம் பெற்றது. சம்பந்தப்பட்ட கடாவைத் வெட்டிய திருடர்கள் அதன் சில பாகங்களை எடுத்துச் சென்றுள்ளனர். ஆட்டின் மிகுதியான பாகங்கள், எச்சங்கள் அந்த இடத்தில் காணப்பட்டதாக தெரிவிக்கப் பட்டது. திருடர்களின் இந்தச் செயலால் விவசாயிகள் தமது ஆட்டுப் பட்டியில் உள்ள ஆடுகளை பாதுகாப்பதற்கு இரவில் காவல் கடமையில் ஈடுபடுகின்றனர். (50-224)


## அற்புத குழந்தை இயேசு சிற்றாலய வருடாந்த திருவிழா

(ஆதார வைத்தியசாலை-மந்திகை பருத்தித்துறை)

30.01.2010
திருவிழாத் திருப்பலி-காலை 7.00 மணி
குழந்தை இயேசுவின்
ஆசீர்பெற அழைக்கிறோம்.

பங்குத்தந்தை,
கரவெட்டி.
(சி/564454)


## 8ஆம் ஆண்டு நினைவஞ்சலி



| தாயின் மடியில் | ஆண்டவன் அடியில் |
| --- | --- |
| 19 ★ 07 ★ 1959 | 25 ★ 01 ★ 2002 |

### அமரர் நாகேந்திரம் ஜெகதீஸ்வரன்

திதி: 27.01.2010

ஒளிவிளக்காயிருந்து எமக்கு
வழிகாட்டிய அன்பின் அண்ணாவே!
பண்பின் சிகரமாயிருந்து -எம்மை
உயர வைத்த அண்ணாவே!
பாசத்தினால் எம்மை ஆண்ட எம் அன்புத் தெய்வமே!
எம்மைத் தவிக்க விட்டுச்
சென்று எட்டு ஆண்டுகளாகிவிட்டன.

தகவல்:
சுன்னாகம். (94256) குடும்பத்தினர்.

## ஓராண்டு நினைவலைகள்

அன்னை மடியில்: 1945.06.20
ஆண்டவன் அடியில்: 2009.02.06



### அமரர் சண்முகராசா இலங்கைநாதன்

(உரிமையாளர், அன்னராஜா ஸ்ரோர்ஸ், ஆஸ்பத்திரி வீதி, யாழ்ப்பாணம்)

திதி: பூர்வபக்க துவாதசி

நிமிர்ந்த நன்நடையும், நேர்கொண்ட பார்வையும், ஞானச்செருக்கும் அவனியில் எவர்க்கும் அஞ்சாது அன்பாலும் பண்பாலும் அனைவரையும் அரவணைத்த எம் அன்புத் தெய்வமே! கண்மூடித் திறக்கும் நேரத்தில் எங்களைத் தவிக்கவிட்டு நிரந்தரமாய் பிரிந்தீர்களே. உங்களுக்கு நிகர் இனி எங்களுக்கு யார்?

ஆண்டு ஒன்று ஆனாலும் அணையாதே உங்கள் நினைவுகள்.

அன்பு மனைவி, பிள்ளைகள், பேரப்பிள்ளைகள்.
நாவலர் வீதி, யாழ்ப்பாணம். (சி/564428)

## 31ஆம் நாள் நினைவஞ்சலியும் வீட்டுக்கிருத்திய அழைப்பும்



| அன்னை மடியில் | ஆண்டவன் திருவடியில் |
| --- | --- |
| 16 ★ 08 ★ 1947 | 28 ★ 12 ★ 2009 |

### அமரர் முத்து முருகானந்தன்

கடந்த 28.12.2009 திங்கட்கிழமையன்று இறைபதம் அடைந்த எமது குடும்பத்தலைவரின் வீட்டுக்கிருத்திய நிகழ்வு இன்று (27.01.2010) புதன்கிழமை மு.ப 10.30 மணியளவில் எமது இல்லத்தில் நடைபெறும். இந்த நிகழ்விலும் அதனைத் தொடர்ந்து இடம்பெறும் மதிய போசனத்திலும் உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரையும் கலந்து கொள்ளுமாறு அன்புடன் அழைக்கின்றோம். இத்துடன் அன்னாரின் மரணச் செய்தியறிந்து எமது துயரில்பங்கு கொண்டவர்களுக்கும் மற்றும் அனுதாபம் தெரிவித்தவர்களுக்கும் எமது மனமார்ந்த நன்றிகளைத் தெரிவித்துக்கொள்கின்றோம்.

வளாக ஒழுங்கை,
திருநெல்வேலி, யாழ்ப்பாணம். குடும்பத்தினர்.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



வடக்கின் வசந்தம் அபிவிருத்தித் திட்டத்தின் வட்டுக்கோட்டையில் ஆயுள்வேத வைத்திய சாலைக்கான கட்டடத்தை சுதேசிய மருத்துவதுறை அமைச்சர் திஸ்ஸ கரலியத்த அடிக்கல் நாட்டி திட்டத்தை ஆரம்பித்து வைத்து பேசுவதனையும் அருகில் சிரேஷ்ட உதவிச் செயலாளர் அசோக பீரிஸ், சிரேஷ்ட ஆயுள்வேத வைத்திய கலாநிதி ஏ.மாரிமுத்து வீரசிங்கம் ஆகியோர் அமர்ந்துள்ளதையும் இந்த நிகழ்வில் கலந்து கொண்ட ஒரு பகுதியினரையும் படங்களில் காணலாம்.

(படங்கள்: இரா. சுதா)

# வட்டுக்கோட்டைத் தீர்மானத்தின் மீதான மீள்வாக்கெடுப்பு புலம்பெயர் நாடுகளில்

கொழும்பு, ஜன. 26

வட்டுக்கோட்டை தீர்மானத்தின் மீதான மீள்வாக்கெடுப்பு நெதர்லாந்து, ஜேர்மன், சுவிஸ் ஆகிய நாடுகளில் வாழும் புலம்பெயர்ந்த தமிழர்கள் மத்தியில் நடைபெற்றது.

வரலாற்றுச் சிறப்புமிக்க வட்டுக்கோட்டைத் தீர்மானத்தின் மீதான மீள் வாக்களிப்பு நேற்று முன்தினம் நெதர்லாந்தில் 15 வாக்குச்சாவடிகளில் நடைபெற்றது. 99.2 வீதமான இலங்கைத் தமிழ் உறவுகள் சுதந்திரத் தமிழீழத் தனியரசை அமைப்பதே தமது விருப்பம் என தமது கருததை இத் தேர்தலில் பதிவு செய்துள்ளனர்.

நேற்றுமுன்தினம் காலை 9 மணியிலிருந்து மாலை 8 மணிவரை இவ்வாக்கெடுப்பில் நெதர்லாந்தில் வாழும் 80 வீதத்திற்கும் அதிகமான தமிழீழ மக்கள் வாக்களித்திருந்தனர்.

இதில் கண்காணிப்பாளர்களாக நெதர்லாந்து அரசுத் தேர்தல்களின் கண்காணிப்பாளர்கள், நெதர்லாந்தின் பூர்வீகக்குடிகளும் கடமையாற்றியிருந்தனர்.

இங்கு மொத்தமாக 2 ஆயிரத்து 750 வாக்குகள் பதிவாகியிருந்தன. இதில் சுதந்திர தமிழீழத் தனியரசை ஆதரித்து 2 ஆயிரத்து 728 வாக்குகளும், தனியரசை எதிர்த்து 9 வாக்குகளும், 13 வாக்குகள் செல்லுபடியற்றவையாகவும் பதிவு செய்யப்பட்டிருந்தன.

எனவே 99.2 வீதமான இலங்கைத் தமிழ் உறவுகள், சுதந்திரத் தமிழீழத் தனியரசை அமைப்பதே தமது விருப்பம் என தமது கருத்தை இத் தேர்தலில் பதிவு செய்துள்ளனர்.

வட்டுக்கோட்டைத் தீர்மானத்தின் மீதான மீள்வாக்கெடுப்பு ஜேர்மனி முழுவதும் அமைக்கப்பட்ட 110 வாக்களிப்பு நிலையங்களில் நேற்று முன்தினம் காலை 8 மணிக்கு ஆரம்பமாகியது. காலை வாக்களிப்பு நிலையங்கள் திறக்கப்பட்டவுடன் ஜேர்மன் வாழ் புலம்பெயர்ந்த தமிழ்மக்கள் தங்கள் வரலாற்றுக்கடமையை நிறைவேற்றுவதற்கு தங்கள் வாக்குகளைப் பதிவுசெய்தனர்.

வட்டுக்கோட்டைப் பிரகடனத்தின் மீதான மீள்வாக்குக் கணிப்பில் 99.2 வீதமான தமிழ்மக்கள் இறைமையுள்ள தனித் தமிழீழ அரசினை நிறுவுவதற்குத் தமது விருப்பத்தை தெரிவித்துள்ளனர்.

ஜேர்மன் முழுவதும் வாக்களித்த 23 ஆயிரத்து 89 வாக்காளர்களில் 22 ஆயிரத்து 904 வாக்காளர்கள் தனித் தமிழீழ அரசை நிறுவுவதற்கு ஆம் என்றும், 136 வாக்காளர்கள் இல்லை என்றும் 49 வாக்குகள் செல்லுபடியாகாத வாக்குகளாகவும் பதிவாகியுள்ளன.

இதன்படி வட்டுக்கோட்டைப் பிரகடனத்தின் அடிப்படையில் இறைமையுள்ள தனித் தமிழீழ அரசினை நிறுவுவதற்கு 99.2 வீதமான மக்கள் ஆம் என்றும் 0.59 வீதமான மக்கள் இல்லை என்றும் வாக்களித்ததுடன், 0.21 வீதமான வாக்குகள் செல்லுபடியற்றதாகப் பதிவாகியுள்ளது எனத் தேர்தல் குழு தமது அறிக்கையில் தெரிவித்துள்ளது.

அதேவேளை, சுவிஸ் நாடு தழுவிய வட்டுக்கோட்டை தீர்மானம் மீதான வாக்கெடுப்பில் கடும் குளிரையும் பொருட்படுத்தாது மக்கள் திரண்டுவந்து பெருவாரியாக வாக்களித்தனர் எனச் செய்திகள் தெரிவிக்கின்றன.

இந்த வாக்கெடுப்பு கடந்த சனிக்கிழமையும், ஞாயிற்றுக்கிழமையும் நடைபெற்றமை குறிப்பிடத்தக்கது. பஸேல், பேர்ன், சூரிச் மாநிலத்திலும் மக்கள் ஓரளவு கலந்துகொண்டனர். (10)

(பக்கங்கள் கீழே)



வட்டுக்கோட்டைத்தீர்மானத்தின் மீதான வாக்கெடுப்பின் போது எடுக்கப்பட்ட படங்கள்...

# தேர்தல் செய்திகளைச் சேகரிப்பதற்கு 40 வெளிநாட்டு ஊடகர்கள் வருகை

கொழும்பு, ஜன. 27

வெளிநாட்டு ஊடகவியலாளர்கள் 40 பேர் இலங்கைக்கு விஜயம் செய்துள்ளனர் எனத் தெரியவருகிறது.

பிரபல செய்தி ஊடகங்கள், சஞ்சிகைகள் மற்றும் இணையத் தளங்களைச் சேர்ந்த சிரேஷ்ட ஊடகவியலாளர்களே இவ்வாறு இங்கு செய்துள்ளனர்.

ஜனாதிபதித் தேர்தல் தொடர்பான செய்தி சேகரிப்பில் ஈடுபடும் நோக்கிலேயே வெளிநாட்டு ஊடகவியலாளர்கள் இலங்கைக்கு விஜயம் செய்துள்ளனர்.

ஏற்கனவே இலங்கையில் செய்தி சேகரிப்பில் ஈடுபட்டு வரும் நிறுவனங்களுக்கு மேலதிகமாக இந்த நாற்பது ஊடகவியலாளர்களும் விஜயம் செய்துள்ளனர்.

தேர்தல் வன்முறைச் சம்பவங்கள் இடம்பெறக்கூடிய பிரதேசங்களிலும், வடக்கு கிழக்கிலும் குறித்த வெளிநாட்டு ஊடகவியலாளர்கள் செய்தி சேகரிப்பில் ஈடுபட்டனர்.

சில சர்வதேச ஊடகக் குழுக்கள் ஏற்கனவே வடக்கு, கிழக்கு நோக்கிச் சென்றுள்ளன என்றும் அறியவந்தது. (அ-சி)

# இரணமடு குடிதண்ணீர் திட்டத்தை ஆரம்பிக்க அரசு துரித நடவடிக்கை

கொழும்பு, ஜன. 27

வன்னி இரணமடு குடிதண்ணீர் விநியோகத் திட்டத்தை மேலும் இரண்டு மாதங்களில் ஆரம்பிக்க தாம் எண்ணியுள்ளார் என நீர் வழங்கல் அமைச்சர் மஹிந்த அமரவீர தெரிவித்துள்ளார்.

இதற்குத் தேவையான நிதி ஒதுக்கப்பட்டுள்ளது எனவும் இதற்கான பணிகளை முன்னெடுப்பதற்கு 710 கோடி ரூபா ஒதுக்கப்பட்டுள்ளது எனவும் அவர் தெரிவித்தார்.

முழு யாழ். குடாநாட்டிற்கும் பயனளிக்கும் வகையில் இரணமடு குடிதண்ணீர்த் திட்டம் அமையவுள்ளது.

ஆசிய அபிவிருத்தி வங்கியினதும் அரசினதும் நிதி உதவியுடன் முன்னெடுக்கப்படும் இரணமடு குடிதண்ணீர்த் திட்டம் யாழ். குடாநாட்டிலுள்ள அனைத்து மக்களினதும் குடிதண்ணீர்ப் பிரச்சினைகளைத் தீர்ப்பதற்கு வழிகோலும் எனவும் அவர் தெரிவித்தார். (சி)

# கொச்சிக்கடை புனித அந்தோனியார் ஆலயத்திற்கு அரச காணி நன்கொடை

கொழும்பு, ஜன. 27

கொழும்பு கொச்சிக்கடை புனித அந்தோனியார் ஆலயத்திற்கு வரும் பெருந்தொகையான பக்தர்களின் நலன்கருதி ஆலயத்திற்கு அருகிலுள்ள அரச காணியொன்றை நன்கொடையாக வழங்க ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ தீர்மானித்துள்ளார்.

இக்காணிக்கான உறுதிப்பத்திரம் கொழும்பு பேராயர் அதிமேதகு மல்கம் ரஞ்சித் ஆண்டகையிடம் ஜனாதிபதி மூலம் அண்மையில் கையளிக்கப்பட்டுள்ளது.

175 வருட வரலாற்றைப் பின்னணியாகக் கொண்டுள்ள புனித அந்தோனியார் ஆலயத்திற்கு வருகைதரும் ஆயிரக்கணக்கான பக்தர்களுக்கு வசதி களை ஏற்படுத்திக் கொடுப்பதற்காக காணியொன்றை வழங்குமாறு பேராயர் விடுத்த வேண்டுகோளை யடுத்தே ஜனாதிபதி இந்தக் காணியை அரசின் நன்கொடையாக வழங்கியுள்ளார் என ஜனாதிபதிச் செயலகம் தெரிவிக்கின்றது. இந்நிகழ்வில் பிரதியமைச்சர் சரத்குமார குணரத்ன, ஜனாதிபதியின் செயலாளர் லலித் வீரதுங்க ஆகியோரும் கலந்து கொண்டனர். (சி)

# மாலியாவில் தனித்துவிடப்பட்ட கப்பலின் இலங்கைக் கப்டன் அவசர உதவி கோருகின்றார்

கொழும்பு, ஜன.27

சோமாலியாவில், பார்பெரா துறைமுகத்தில் எதுவித குற்றச்சாட்டுக்களும் பதிவு செய்யாத நிலையில் கப்பல் எம்.விலைலா தனித்து விடப்பட்டுள்ளது. இக்கப்பலின் கப்டன் ஒரு இலங்கையர் ஆவார். கடந்த ஐந்து மாதங்களாக கைவிடப்பட்ட நிலையிலுள்ள இக்கப்பலில் இலங்கை, இந்திய, பாகிஸ்தான், சோமாலிய பணியாளர்கள் உள்ளனர். ஆனால் இவர்களுக்கு போதிய உணவு, தண்ணீர், அல்லது மருந்துப் பொர்ருள்கள் போன்ற அடிப்படைத் தேவைகள் அனுப்பப்படுவதில்லை என்றும் எனவே அந்த பணியாளர்களின் உடல்நிலை மிகவும் மோசமாகியுள்ளதாகவும் கப்டன் சரத் தெரிவித்துள்ளார்.

இதனால் விரக்தி நிலையிலுள்ள பணியாளர்கள் தற்கொலை செய்யும் மனநிலையில் உள்ளதாகக் குறிப்பிட்டுள்ள கப்டன் தொண்டு நிறுவனங்கள், சர்வதேச சமூகம் மற்றும் சோமாலிய அரசாங்கம் ஆகியவற்றிடமிருந்து தமக்கு உதவி புரியுமாறு அவர் அவசர வேண்டுகோள் விடுத்துள்ளார். கடந்த ஐந்து மாதங்களுக்கும் தமக்கு எதுவித சம்பளமும் கிடைக்கவில்லை என்றும் அவர் சுட்டிக்காட்டியுள்ளார்,

# திருமலை நகரசபைத் தலைவரின் பாதுகாப்பு வாபஸ் பெறப்பட்டது

கொழும்பு, ஜன. 27

திருக்கோணமலை நகரசபைத் தலைவர் ச.கௌரிமுகந்தனின் பாதுகாப்பு நேற்றுமுன்தினம் வாபஸ் பெறப்பட்டது. ஜனாதிபதித் தேர்த லில் போட்டியிடும் வேட்பாளர் ஒருவருக்கு ஆதரவு வழங்குவதாக அவர் வெளி யிட்ட செய்தியைத் தொடர்ந்தே இந்த நிலைமை அவருக்கு ஏற்பட்டுள்ளது எனத் தெரிவிக் கப்படுகிறது.

பாதுகாப்பு உ[illegible] பட்டதைத் தொடர்ந்து தமக்கு எதுவும் நடக்கலாம் என அவர் அச்சம் தெரிவித்துள்ளார்.

இது விடயமாக திருகோணமலை சிரேஷ்ட பொலிஸ் அத்தியட்சகருக்கு அவர் அறிவித்தபோதும் தேர்தல் கடமைகளுக்காக இந்த மாற்றம் செய்யப்பட்டது என பொலிஸ் அத்தியட்சகர் தெரிவித்தார் [illegible]றது. (சி)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மரண அறிவித்தல்

## இளையதம்பி தங்கவேலாயுதம்



உரும்பிராய் தெற்கைப் பிறப்பிடமாகவும் உயரப்புலம், ஆனைக்கோட்டையை வசிப்பிடமாகவும் கொண்ட இளையதம்பி தங்கவேலாயுதம் 24.01.2010 ஞாயிற்றுக்கிழமை காலமானார்.

அன்னார் இளையதம்பி-இராசம்மா தம்பதியரின் அன்பு மகனும் இரத்தினம்-நல்லம்மா தம்பதியரின் அன்பு மருமகனும் சரஸ்வதியின் அன்புக் கணவரும் சிவகுமார், சிவதாசன், கல்பனா ஆகியோரின் பாசமிகு தந்தையும் குமுதினி, தர்சினி, குகராஜன் ஆகியோரின் அன்பு மாமனாரும் இலட்சுமிப்பிள்ளை, சிவபாக்கியம், பரமேஸ்வரி-மாமணி (லண்டன்), கணேசர், கமலாதேவி ஆகியோரின் சகோதரரும் வின்ஷா, வினுஜன், விபூசன், விதுஷன், நின்ஷா, கிஷான் ஆகியோரின் அன்புப் பேரனுமாவார்.

அன்னாரின் இறுதிக் கிரியைகள் உயரப்புலம் ஆனைக்கோட்டையில் இன்று (27.01.2010) புதன்கிழமை மு.ப.11 மணிக்கு நடைபெற்று பூதவுடல் கரையாம்பிட்டி மயானத்தில் தகனம் செய்யப்படும்.

இவ்வறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

உயரப்புலம்,
ஆனைக்கோட்டை.
தொ.பே: 0779152481 (94272)

தகவல்:
த.சிவதாசன் (மகன்).

# மரண அறிவித்தல்

## திருமதி மகாதேவா நேசரத்தினம்



தாவடியைப் பிறப்பிடமாகவும் கல்வியங்காட்டை வசிப்பிடமாகவும் தற்போது கனடாவில் வசித்து வந்தவருமாகிய திருமதி மகாதேவா நேசரத்தினம் நேற்று (26.01.2010) செவ்வாய்க்கிழமை கனடாவில் காலமாகிவிட்டார்.

அன்னார் காலஞ்சென்ற மகாதேவாவின் அன்பு மனைவியும் யோகமலர் (கனடா), செல்வரட்ணம் (கனடா), புஸ்பரர்சா (கனடா), ரஞ்சிதமலர் (கல்வியங்காடு), ஞானமலர் (கனடா), விஜயராஜா (கனடா) ஆகியோரின் பாசமிகு தாயும் பாலசுப்பிரமணியம் (கனடா), இந்திராதேவி (கனடா), ராகினி (கனடா), துரைசிங்கம் (கல்வியங்காடு), சௌந்தரராகவன் (கனடா), ஶ்ரீமதி (கனடா) ஆகியோரின் மாமியாரும் கோமதி (லண்டன்), சுமதி (கனடா), ரகுபாலன் (கனடா), சிவநேசன் (கனடா), சிவரூபன் (கனடா), சிவகரன் (கனடா), சிவதாரணி (கனடா), சுமன் (கனடா), சுலக்ஷனா (கனடா), வினோத் (கனடா), டனிஷா(கல்வியங்காடு), பிரசன்னா (லண்டன்), றோமியா (கனடா), டிவிஷன் (கனடா), டிவிஷா (கனடா), றினோஷா (கனடா), ஜெனுஷா (கனடா) ஆகியோரின் பேர்த்தியுமாவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் கனடா-ரொறன்ரோவில் நடைபெறும் என்பதை அறியத்தருகிறோம். இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

'மலர் வாசம்'
ஞா.பா.ச.வீதி,
கல்வியங்காடு, யாழ்ப்பாணம்.
தொ.பே: 0212226909 (94270)

தகவல்:
ந.துரைசிங்கம் (மருமகன்),
து.ற[illegible] (மகள்).

# நீர்வேலிப் பகுதியில் நாளுக்கு நாள் திருடர் நடமாட்டம் அதிகரிப்பு

யாழ்ப்பாணம், ஜன.27

நீர்வேலிப் பகுதியில் திருடர்களின் தொல்லை நாளுக்கு நாள் அதிகரித்து வருவதாகப் பிரதேச மக்கள் தெரிவித்தனர்.

இரவு நேரங்களில் இந்தத் திருடர்கள் அதிகளவில் நடமாடுவதால் மக்கள் இரவுப் பொழுதைப் பீதியுடன் கழித்து வருகின்றனர். நேற்று முன்தினம் இந்தப் பகுதியில் உள்ள கிணறு ஒன்றில் பதுங்கி இருந்த திருட்டுக் கோஷ்டி ஒன்று மக்களின் நடமாட்டத்தை அடுத்து தப்பிச் சென்றுள்ளதாகக் கூறப்படுகின்றது.

அத்துடன் பட்டப் பகலிலும் ஆள்கள் இல்லாத சமயம் பார்த்து வீடுகளுக்குள் நுழையும் திருடர்கள் பொருள்களைத் திருடிச் செல்வதாகக் கூறப்படுகின்றது.

திருடர்களின் தொல்லை இப்பகுதியில் அதிகரித்து இருப்பதால் மக்கள் இரவில் விழிப்புடன் இருப்பதாகக் கூறப்படுகின்றது. (50-224)


LG
Life's Good



என்ன ஒரு
மனம் எழுச்சி பெறும்
அனுபவம்!!
HT353 5.1 Home Theatre System

HT353
• Total output 300W (45Wx5 + 75W)
• VSM (Virtual 10.1Ch Sound)
• Maximum playback comatibility DivX/ DVD±R/RW/MP3/WMA/JPEG
• USB plus

Rs. 31,990
12 மாத கால வட்டி இல்லாத தவணைமுறை.

தொலைபேசி, கிரெடிட்காட், பில்களை செலுத்துதல் எந்தவொரு காட்சியறையிலும் உங்கள் கையடக்க தொலைபேசிகளை மீளவும் நிரப்பிக்கொள்ள வசதியுண்டு.
Dialog Airtel Lanka Bell Western Union HSBC
Abans



வெள்ளிவிழா ஆண்டில் வீறுநடையுடன்..
25
கலாலயா
பயிற்சியகம்
1985 - 2010
பெருமாள் கோயிலுக்கு அண்மையில், யாழ்ப்பாணம்.

மகளிருக்கான 3 மாத சான்றிதழ் பயிற்சிகள்

- கேக் ஐசிங், Sugar Flowers, Fondant, மற்றும் ஏனைய ஐசிங்வகைகள்.
- உணவு தயாரித்தல் (கேக் வகைகள், பீஸா, Pastry, சிற்றுண்டிகள், ஈற்றுணவுகள்)
- பப்றிக் வர்ணம் தீட்டுதல் : துணிகளில், கண்ணாடியில், சேலையில் (Saree Painting)
- கை வேலை : கம்பளி நூல், Soft Toys, கழிவுத் துணிகளில் வேலைப்பாடுகள்.
- பூ வேலை : கடதாசி, துணி, Paper Ribbon, ஜெலற்றின், கபாயா மலர்கள் செய்தல்
- Saree Work : சேலையில் முத்துக்கள், சுயிக்கின்ஸ் கட்டுதல், Net Work செய்தல்
- கூந்தல் அலங்காரம் : 50 வகையான கொண்டைகள் போடுதல், முடி அயன் செய்தல், வெட்டுதல், சுருட்டுதல், நிறமூட்டுதல், Perming.

மேற்படி வகுப்புக்கள் வார நாட்களில் மட்டும் நடைபெறும்.

ஒரு மாதகால அழகுக் கலை சான்றிதழ் பயிற்சிகள்

Facials (முக அழகுக்கலைகள்) மணப்பெண் அலங்காரங்கள், சேலை உடுத்தும் முறைகள், கைகள், கால்கள், விரல்கள், நகங்கள் அழகுபடுத்துதல் (Manicure, Pedicure). மற்றும் 50 கூந்தல் அலங்காரங்கள், முடி அயன் செய்தல், வெட்டுதல், சுருட்டுதல், நிறமூட்டுதல், Perming. வாரநாள்/சனி ஞாயிறு இருபிரிவுகள்.

6 மாத உடை தயாரித்தல் (தையற் கலை) சான்றிதழ் பயிற்சிகள்

(அடிப்படைத்தையலுடன் குழந்தைகள், சிறுவர், மகளிருக்கான ஆடைகள், சாரிபிளவ்ஸ் தைத்தல்) வாரநாள்/சனி ஞாயிறு இருபிரிவுகள்.

- தையல் தெரிந்தவர்களுக்கான இருவாரகால சான்றிதழ் அற்ற சாறி

புதிய வகுப்புக்கள் ஆரம்பம் : 30-01-2010 - சனிக்கிழமை
01-02-2010 - திங்கட்கிழமை

மேலும் விபரங்களை பி.ப 2.00 மணி வரை நேரில் அறிந்து கொள்ளலாம்.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# எத்தியோப்பிய விமான விபத்தில் 90 பேர் பலி; 25 சடலங்கள் மீட்பு

## தேடுதல் பணியில் கப்பல்கள், ஹெலிகொப்டர்கள்

பெய்ரூட், ஜன. 27

மத்தியதரைக் கடல் பகுதிக்குள் விழுந்து விபத்துக்குள்ளான எத்தியோப்பிய விமானத்தில் இருந்த 90 பேரும் பரிதாபமாக பலியாயினர். இவர்களில் 25 பேரின் சடலங்கள் மீட்கப்பட்டுள்ளன. காணாமற் போயுள்ள ஏனையோரை மீட்பதற்கான பணியில் லெபனான் கடற்படைக் கப்பல்கள், மீட்புப் படகுகள் ஆகியவை ஈடுபடுத்தப்பட்டுள்ளன.

மோசமான வானிலை காரணமாக, எத்தியோப்பிய விமானம் திங்கட்கிழமை மத்தியதரைக் கடல் பகுதிக்குள் விழுந்து விபத்துக்குள்ளானது. விமானத்திலிருந்த 90 பேரும் பரிதாபமாகப் பலியாயினர். இவர்களில் 25 பேரின் சடலங்கள் மீட்கப்பட்டுள்ளன.

எத்தியோப்பிய அரசுக்குச் சொந்தமான இந்த எத்தியோப்பியன் ஜெட் விமானம், லெபனான் தலைநகர் பெய்ரூட்டிலிருந்து எத்தியோப்பாவின் தலைநகரான அடிஸ் அபாபா நகருக்கு புறப்பட்டுச் சென்றது.

அப்போது, அங்கு இடியுடன் கூடிய பலத்த மழை பெய்துகொண்டிருந்தது. விமானம் புறப்பட்ட ஐந்து நிமிடங்களில் விமானக் கட்டுப்பாட்டு அறையுடனான அதன் தகவல் தொடர்பு துண்டிக்கப்பட்டது. விமான நிலைய ரேடாரிலிருந்தும் இவ்விமானம் மறைந்தது.

பெய்ரூட்டின் தெற்கு பகுதியில் உள்ள நமேஹ் என்ற நகரத்திலிருந்து 2.5 கடல் மைல் தொலைவில் அந்த விமானம் கடலுக்குள்விழுந்தமை கண்டுபிடிக்கப்பட்டது.

இந்த விமானத்தில் 83 பயணிகளும், ஏழு விமான சிப்பந்திகளும் இருந்தனர். இவர்கள் அனைவருமே விபத்தில் உயிரிழந்திருக்கக்கூடும் என அஞ்சப்படுகிறது. விமானத்தில் பயணம் செய்தவர்களில் 54 பேர் லெபனானைச் சேர்ந்தவர்கள். 22 பேர் எத்தியோப்பியாவைச் சேர்ந்தவர்கள்.

எத்தியோப்பாவிலிருந்தும் மீட்புக் குழுவினரும், அதிகாரிகளும் சம்பவ இடத்திற்கு அனுப்பிவைக்கப்பட்டுள்ளனர்.

லெபனான் போக்குவரத்துத்துறை அமைச்சர் காஜி அரிடி குறிப்பிடுகையில், ''விமானத்தில் இருந்த 90 பேரில் ஒருவர்கூட உயிருடன் மீட்கப்படவில்லை. எல்லோரும் பலியாகி இருப்பர் என்று அஞ்சப்படுகிறது. அந்த விமானத்தில் லெபனானுக்கான பிரான்ஸ் தூதர் டானிஸ் பீட்டனின் மனைவி மார்லா சாஞ்சஸ் பயணம் செய்துள்ளார். இதில் தீவிரவாதிகளின் சதிச்செயல் எதுவும் இல்லை. இடியுடன் மழை பெய்ததால் இந்த விபத்து நடந்திருக்கலாம் என்ற சந்தேகம் எழுந்துள்ளது. இதுதொடர்பாக உயர்நிலை விசாரணைக்கு உத்தரவிடப்பட்டுள்ளது'' என்றார்.

# ஜீப் ஆற்றில் கவிழ்ந்து எட்டுப்பேர் உயிரிழப்பு.

## நேபாளத்தில் சம்பவம்

காத்மண்டு, ஜன. 27

நேபாளத்தில் ஆற்றில் ஜீப் கவிழ்ந்து இந்தியர் உட்பட 8 பேர் உயிரிழந்தனர். மேலும் 7 பேர் காயமடைந்தனர்.

நேபாளத்தின் மேற்குப் பகுதியான பஜஹாங் மாவட்டத்திலுள்ள மாயூரி பாஹர் என்ற இடத்தில் ஞாயிற்றுக்கிழமை இரவு இச்சம்பவம் நிகழ்ந்தது.

மாவட்டத் தலைநகர் செயின்பூர் நோக்கி 15 பேருடன் சென்றுகொண்டிருந்த ஜீப், சேட்டி ஆற்றின் அருகே சென்றபோது எதிர்பாராதவிதமாக ஆற்றுக்குள் கவிழ்ந்தது. இச்சம்பவத்தில் ஜீப்பில் பயணம் செய்த 8 பேர் உயிரிழந்தனர்.

இறந்தவர்களில் சாரதி பசந்தா ஜோஷி, பகதூர்சிங், தீபக் பண்டாரி, தேவராஜ் கிரி, விஷ்ணு கிரி, இந்தியரான பிரோஸ் ஆகியோர் அடையாளம் காணப்பட்டுள்ளனர்.

இருவரின் சடலங்கள் அடையாளம் காணப்படவில்லை. மேலும் 7 பேர் படுகாயம் அடைந்து வைத்தியசாலையில் சிகிச்சை பெற்று வருகின்றனர் எனப் பொலிஸார் தெரிவித்தனர்.

# சவப் பெட்டியில் அடைக்கப்பட்ட முதியவர் உயிர் பிழைத்து வருகை

## போலந்தில் சம்பவம்

கடோவிஸ், ஜன. 27

இறந்துவிட்டார் என மருத்துவர்கள் கூறியதால், சவப்பெட்டியில் அடைக்கப்பட்ட முதியவர் உயிர் பிழைத்து வந்த சம்பவம் போலந்தில் நடைபெற்றுள்ளது.

போலந்தின் கடோவிஸ் நகரைச் சேர்ந்த முதியவர் ஜோசப் கூசி(வயது - 76). தேன் சேகரிக்கும் தொழிலில் ஈடுபட்டுவரும் இவருக்கு சில நாள்களுக்கு முன்னர் திடீரென மாரடைப்பு ஏற்பட்டு மயக்கமானார்.

இவருடைய இரண்டாவது மனைவி லட்மிளா, அம்புலன்ஸை வரவழைத்து இவரை வைத்தியசாலைக்குக் கொண்டு சென்றார். வைத்தியசாலையில் பரிசோதனை செய்த மருத்துவர், முதியவர் இறந்து விட்டார் என அறிவித்து சான்றிதழும் அளித்துவிட்டார்.

பின்னர், கூசியின் இறுதிச் சடங்குக்கான வேலைகளில் உறவினர்கள் ஈடுபடத் தொடங்கினர். சடலத்தையும் சவப் பெட்டிக்குள் வைத்தாகிவிட்டது.

திடீரென மனைவி லட்மிளா, தனக்கு கணவனின் ஞாபகமாக அவருடைய 'நெக்லேஸ்' வேண்டும் எனக் கூறினார். மூடிய சவப்பெட்டியை திறக்கச் சொல்லி நெக்லேஸை கழற்ற கூசியின் கழுத்தை லட்மிளா தொட்டபோது அதிர்ச்சி அடைந்தார்.

இறுதிச்சடங்கு செய்யப்படும் முதியவருக்கு நாடித் துடிப்பு இருப்பதாகக் கூறி லட்மிளா அலறினார். பின்னர் வேறு சிலரும் அதை உறுதிப்படுத்தினர்.

உடனடியாக முதியவரை சவப்பெட்டியிலிருந்து வெளியே தூக்கி, முன்னர் கொண்டு சென்ற அதே வைத்தியசாலைக்கு எடுத்துக் சென்றனர். மருத்துவர்கள் பரிசோதித்தபோது நிமிடத்துக்கு 20முதல் 30என்ற அளவில் துடிப்புகள் இருந்தமை தெரியவந்தது.

உடனடியாக அவசர சிகிச்சைப் பிரிவில் முதியவரை மருத்துவர்கள் சேர்த்தனர். பின்னர் மூன்று நாள்கள் சிகிச்சை அளிக்கப்பட்டு தற்போது ஆரோக்கியமாக முதியவர் கூசி வீடு திரும்பி யுள்ளார்.

என் உயிரைக் காப்பாற்றியது மனைவி லட்மிளாதான் என நன்றியுடன் நினைவுகூர்ந்த முதியவர், ஒரு பானை தேனை அவருக்கு தாம் பரிசளித்துள்ளேன் என மகிழ்ச்சியுடன் கூறினார். முதியவரை முன்னர் பரிசோதித்த மருத்துவர் தமது தவறான முடிவுக்கு மன்னிப்பு கோரினார்.

# ஆங் சான் சூகிக்கு நவம்பரில் விடுதலை

யாங்கோன், ஜன. 27

மியான்மர் ஜனநாயகக் கட்சித் தலைவி ஆங்சான் சூகி, இவ்வருட நவம்பரில் விடுதலை செய்யப்படுவார் என உள்துறை அமைச்சர் மேஜர் ஜெனரல் மாங்தோ அறிவித்துள்ளார்.

மியான்மரில் இராணுவ ஆட்சி நடைபெற்று வருகிறது. அங்கு ஜனநாயக ஆட்சி கோரி பல ஆண்டுகளாக சூகி போராடி வருகிறார். இதனால் அவரை இராணுவ ஆட்சியாளர்கள் வீட்டுக்காவலில் வைத்துள்ளார்கள். கடந்த 20 ஆண்டுகளில் 14 ஆண்டுகளாக அவர் வீட்டுக்காவலில் இருந்து வருகிறார்.

ஆங் சான் சூகியை விடுதலை செய்யுமாறு உலக நாடுகள் பலவும் வலியுறுத்தியுள்ளன. ஆனால், அதற்கு அந்த நாடு சம்மதிக்கவில்லை.

இந்நிலையில் அவர் நவம்பர் மாதம் விடுதலை செய்யப்படுவார் என உள்துறை அமைச்சர் மேஜர் ஜெனரல் மாங்தோ அறிவித்துள்ளார். கடந்த 21 ஆம் திகதி நடைபெற்ற உள்துறை அதிகாரிகள் கலந்துகொண்ட கூட்டத்தில் அவர் இதை தெரிவித்துள்ளார். மியான்மரில் கடந்த 20 ஆண்டுகளில் முதல் முறையாக நாடாளுமன்றத் தேர்தல் ஒக்டோபரில் நடத்தப்படலாம் என தெரியவருகிறது. அதற்கு அடுத்த மாதம் சூகி விடுதலை செய்யப்படலாம் என அறிவிக்கப்பட்டுள்ளது.


**1st in Com, G.A.Q.**
**யாழ்ப்பாணம், பேராதனை பல்கலைக்கழகம் (வெளிவாரி)**

★ A/L கலை, வர்த்தகம், கணிதம், விஞ்ஞானம் ஆகியபிரிவுகளில் மூன்று பாடம் சித்தி அடைந்தவர்கள் விண்ணப்பிக்கத் தகுதி உடையவர்கள் ஆகும்.

★ புதிய பிரிவுக்கான விரிவுரைகள் ஆரம்பமாகி நடைபெறுகின்றன.

குறிப்பு:- பேராதனைப் பல்கலைக்கழகத்தின் பதிவுகள் எமது நிறுவனத்தினூடாக நடைபெறுகின்றன.

விவரங்களுக்கு: எஸ்.அருள்நங்கை (94276) புதிய உயர்கல்லூரி ஆரியகுளம் சந்தி, யாழ்ப்பாணம்.

**Walk in Interview**

**Position: Montessori Teachers**

*Medium of Instruction:* English & Tamil
*Expectation :* Good command in English & good personality.

*Age limit* : *25 - 40*
*Salary* : *Attractive and Negotiable*
*Date* : *30/01/2010*
*Time* : *10.00am onwards*

**British college of Higher studies**
No.15, 2nd Floor , Sirampiyady Lane (Off Stanley Road), Jaffna (Above Cosy Hotel)
Tel : 021-2224550, Mobile : 0777222422

**ஜயோதா**
உத்தியோகபூர்வ முடிவுகள்

டிக்கட் தொடர் இல. 601205718 முதல் 601222965 வரை சீட்டிழுப்பு இல. 617 திகதி 25-01-2010

வெற்றி எண்கள்
19 21 52 54 F

ஜக்பொட் பரிசு ரூ. 12,362,950/- வெல்லப்படவில்லை

| வெற்றி எண்கள் | வெற்றி பெற்றோர் | பரிசுத் தொகை | முழு பரிசுத் தொகை |
|---|---|---|---|
| [illegible] | - | 12,362,950/= | - |
| [illegible] | 01 | 400,000/= | 400,000/= |
| [illegible] | 22 | 2,000/= | 44,000/= |
| [illegible] | 353 | 1,000/= | 353,000/= |
| [illegible] | 493 | 1,000/= | 493,000/= |
| [illegible] | 15147 | 60/= | 908,820/= |
| [illegible] | 7244 | 40/= | 289,760/= |
| [illegible] | 176653 | 20/= | 3,533,060/= |
| | | மொத்தம் ரூ. | 6,021,640/- |
| [illegible] | 08 | 50,000/= | 400,000/= |

வெல்லப்பட்ட மொத்த பரிசுத் தொகை 6,421,640/=

இந்த வியாழக்கிழமை சுப்பர் ஜக்பொட
ரூ. 12,841,180/=

| | |
|---|---|
| [illegible] | 601215830-0-04 |
| [illegible] | 601211273-6-12 |
| [illegible] | 601221121-6-00 |
| திருகோணமலை | 601207184-7-17 |
| [illegible] | 601218100-2-03 |
| [illegible] | 601210072-6-07 |
| குருணாகல | 601218245-6-25 |
| [illegible] | 601215617-4-05 |

அபிவிருத்தி லொத்தர் சபை

**கர்நாடக சங்கீத வகுப்புக்கள்**
இந்தியாவில் தேர்ச்சிபெற்ற ஆசிரியையினால் சங்கீதம் (வாய்ப்பாட்டு) கற்பிக்கப்படும்
தைப்பூசத்தை முன்னிட்டு
TAMIL & ENGLISH MEDIUM
46.36 வது ஒழுங்கை.
FLEX Graphic


**31 ஆம் நாள் நினைவஞ்சலியும் அந்தியேட்டி அழைப்பும்**

மலர்வு 03 ★ 06 ★ 1950



உதிர்வு 26 ★ 12 ★ 2009

திருமதி

**தம்பிராசா சின்னத்தங்கச்சி**

கடந்த 26.12.2009 அன்று இறைவனடி சேர்ந்த எமது குடும்பத்தலைவி திருமதி தம்பிராசா சின்னத்தங்கச்சி அவர்களின் வீட்டுக்கிருத்திய நிகழ்வு இன்று (27.01.2010) புதன்கிழமை காலை அன்னாரது இல்லத்தில் நடைபெறும். இந்த நிகழ்விலும் அதனைத் தொடர்ந்து இடம்பெறும் மதிய போசனத்திலும் உற்றார், உறவினர்கள், நண்பர்கள் அனைவரையும் கலந்து கொள்ளுமாறு அன்புடன் அழைக்கின்றோம்.

டச்சு வீதி,
கோப்பாய் தெற்கு,
கோப்பாய். (94278)

*பிள்ளைகள், மருமக்கள், பேரப்பிள்ளை.*

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# தமிழக மீனவர்கள் பிரச்சினையில் மத்திய அரசு தலையிட வேண்டும்

## ஆளுநரிடம் மார்க்ஸிஸ்ட் வலியுறுத்து

சென்னை, ஜன. 27

தமிழக மீனவர்கள் இலங்கைக் கடற்படையினரால் தொடர்ந்து தாக்கப்படுவதைத் தடுக்கக்கோரி தமிழக ஆளுநர் சுர்ஜித் சிங் பர்னாலாவிடம் மார்க்ஸிஸ்ட் கட்சியினர் மனு அளித்தனர்.

கட்சியின் மாநிலச் செயலாளர் என். வரதராஜன் தலைமையில், கட்சியின் மத்தியக் குழு உறுப்பினர் உ.ரா. வரதராசன், தமிழ்நாடு மீன்பிடித் தொழிற்சங்கக் கூட்டமைப்பு பொதுச் செயலாளர் பா.கருணாநிதி, எஸ்.கே. மகேந்திரன் எம்.எல்.ஏ. ஆகியோர் பர்னாலாவை கடந்த திங்கட்கிழமை ஆளுநர் மாளிகையில் சந்தித்தனர்.

ஆளுநரிடம் அளித்த மனுவில் தெரிவிக்கப்பட்டிருப்பவை வருமாறு -

மீன் பிடிப்பதற்காகச் செல்லும் தமிழக மீனவர்கள் மீதான இலங்கைக் கடற்படையின் தாக்குதல்கள் அன்றாட நிகழ்வாகி விட்டன. தமிழ்நாட்டில் அனைத்துத் தரப்பினரும் இதற்கு எதிர்ப்புத் தெரிவித்தும், தாக்குதல்கள் தொடர்கின்றன.

இந்தத் தாக்குதல்களைத் தடுத்து நிறுத்த மத்திய அரசு குறிப்பிடத்தக்க நடவடிக்கை எதையும் எடுக்கவில்லை. மாறாக இலங்கையின் கடல் எல்லைக்குள் நுழைய வேண்டாம் என நமது மீனவர்களுக்கு அறிவுரைகளை மட்டும் வழங்கி வருகிறது.

இலங்கைக்கும், இந்தியாவுக்கும் நடுவே உள்ள கடல் பரப்பு மிகவும் குறுகலானது. எனவே நமது நாட்டின் எல்லைக்குட்பட்ட பகுதியில் மட்டும் மீன் பிடிப்பது மிகக் கடினமானது. கடும் காற்று, பெரும் அலைகள் ஆகியவற்றால் படகுகள் எல்லையைத் தாண்டி சில கடல் மைல் தூரத்துக்குச் செல்வது தவிர்க்க இயலாதது. இலங்கை மீனவர்களுக்கும் இத்தகைய அனுபவம் ஏற்படுகிறது.

எனவே இந்தியா, இலங்கை இடையேயான கடல் பகுதியில் தங்கு தடையற்ற மீன்பிடி உரிமைகள் தமிழக மீனவர்களுக்கு உத்தரவாதம் செய்யப்பட வேண்டும். இதற்கு இலங்கை அரசுடன் பேசி மத்திய அரசு தீர்வு காண வேண்டும்.

மேலும் தமிழக மீனவர்கள் மட்டுமின்றி இந்திய மீனவர்கள் அனைவருக்கும் பெரும் கவலையை ஏற்படுத்தியுள்ள மீன்பிடிக் கட்டுப்பாடு பிரேரணையை மத்திய அரசு உடனடியாகக் கைவிட வேண்டும். இக்குறைதளை நிவர்த்தி செய்ய ஆளுநர் பர்னாலா உரிய நடவடிக்கை மேற்கொள்ள வேண்டும். தமிழக மீனவர் பிரச்சினையில் தலையிடுமாறு மத்திய அரசுக்குபரிந்துரை செய்ய வேண்டும் - என்றுள்ளது.

# இத்தாலியிலுள்ள இந்தியத் தூதரகத்திற்கு புலிகளின் பெயரில் வெடிகுண்டுப் பார்சல்!

சென்னை, ஜன. 27

இத்தாலியின் ரோம் நகரில் உள்ள இந்தியத் தூதரகத்திற்கு விடுதலைப் புலிகளின் பெயரில் வெடிகுண்டுப் பார்சல் அனுப்பி வைக்கப்பட்டதால் பரபரப்பு ஏற்பட்டது. இதையடுத்து தூதரகத்திற்கு பாதுகாப்பு அதிகரிக்கப்பட்டுள்ளது.

இந்தப் பார்சல் ஜனவரி 20ஆம் திகதி தூதரகத்திற்கு வந்தது எனவும், அதன் அனுப்புநர் பெயரில் விடுதலைப் புலிகள் என குறிப்பிடப்பட்டிருந்தது எனவும் தூதர் ஆரிப் கான் கூறியுள்ளார்.

அந்தப் பார்சலில் 2 பியூஸ் வயர்களும் இருந்தன. இதுகுறித்து பொலிஸாருக்குத் தகவல் தெரிவிக்கப்பட்டது. அவர்கள் விரைந்து வந்து பார்சலைக் கைப்பற்றி விசாரணை மேற்கொண்டுள்ளனர்.

இந்தச் சம்பவத்தைத் தொடர்ந்து தூதரகத்திற்குப் பாதுகாப்பு அதிகரிக்கப்பட்டுள்ளது.

விடுதலைப் புலிகள் பெயரைப் பயன்படுத்தி யாரோ சில விஷமிகள் இதை அனுப்பியிருக்கலாம் என சந்தேகிக்கப்படுகிறது.

# தெலுங்கானாப் பகுதியில் நாளை மாபெரும் உண்ணாவிரதப் போர்!

## போராட்டக் குழு அறிவிப்பு

ஐதராபாத், ஜன. 27

தனித்தெலுங்கானா மாநிலம் அமைக்க வேண்டும் என்ற கோரிக்கையை வற்புறுத்தி, தெலுங்கானாப் பகுதியில் உள்ள மக்கள் அனைவரும் ஒன்று கூடி, வரும் 28 ஆம் திகதி மிகப்பெரிய உண்ணாவிரத போராட்டத்தை மேற்கொள்ள வேண்டும் என்று தெலுங்கானா போராட்டக் குழு அறிவித்துள்ளது.

இதுபற்றி போராட்டக் குழுவின் ஒருங்கிணைப்பாளர் எம்.கோதண்டம் செய்தியாளர்களிடம் கூறியவை வருமாறு -

தெலுங்கானா மாநிலம் அமைப்பது பற்றி மத்திய அரசு தெளிவான அறிவிப்பை மிக விரைவாக வெளியிட வேண்டும். இல்லையேல் நாளை 28 ஆம் திகதி ஜனநாயக முறையில் தேர்ந்து எடுக்கப்பட்ட அனைவரும் (எம்.பிக்கள் மற்றும் எம்.எல்.ஏக்கள்) கட்சி வேறுபாடின்றி தங்கள் ராஜினாமாக் கடிதங்களை உறுதியாகக் கொடுக்க வேண்டும். அன்றைய திகதியில் தெலுங்கானா முழுவதும் மக்கள் உண்ணாவிரதம் மேற்கொள்ள வேண்டும் என்றார்.

# இந்தியச் செய்திகள்

# 61 ஆவது குடியரசு தினவிழா சென்னையில் கோலாகலம்!

சென்னை, ஜன. 27

இந்தியாவின் 61 ஆவது குடியரசு தின விழா கோலாகலமாக நேற்று கொண்டாடப்பட்டது. சென்னை மெரீனா கடற்கரையில் நடந்த கோலாகலமான குடியரசு தின விழாவில் தமிழக ஆளுநர் சுர்ஜித் சிங் பர்னாலா மூவர்ண கொடியை ஏற்றி வைத்து முப்படைகளின் அணிவகுப்பு மரியாதையை ஏற்றுக் கொண்டார்.

இந்த விழாவில், வீரதீரச் செயல் புரிந்தவர்களுக்கு பதக்கங்களை முதலமைச்சர் கருணாநிதி வழங்கினார்.

இதனைத் தொடர்ந்து படையினர் அணிவகுப்பு, கல்லூரிகளில் கலை நிகழ்ச் சிகள் மற்றும் அரசுத் துறைகளில் அலங்கார அணிவகுப்பு வாகனங்களின் வண்ணமயமான நிகழ்ச்சிகள் நடைபெற்றன.

சென்னையில் காமராஜர் வீதி காந்தி சிலை அருகில் குடியரசு தின விழா வெகு விமரிசையாக நேற்றுக்காலை நடைபெற்றது.

முதலமைச்சர் கருணாநிதி, துணை முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் உள்ளிட்ட அமைச்சர்கள், உயர்நீதிமன்றம் சென்னை தலைமை நீதிபதி எச்.எல்.கோகலே, சபாநாயகர் ஆவுடையப்பன், சட்டமன்ற காங்கிரஸ் கட்சித் தலைவர் சுதர்சனம், சென்னை புறநகர கமிஷனர் ஜாங்கிட் மற்றும் அமைச்சர் பெருமக்கள், சட்டமன்ற, நாடாளுமன்ற உறுப்பினர்கள், அரசுத் துறை அதிகாரிகள் ஆகியோர் கலந்து கொண்டனர். உயர் அதிகாரிகள் நிகழ்ச்சியில் கலந்துகொண்டனர்.

தமிழக முதல்வர் கருணாநிதி காலை 7.50 மணியளவில் விழா நடைபெறும் மேடைக்கு வருகை தந்தார்.

முன்னதாக அவர் கூடியிருந்த பொது மக்களுக்கு குடியரசு தின வாழ்த்துக்களைத் தெரிவித்தார்.

7.54 மணிக்கு கவர்னர் சுர்ஜித் சிங் பர்னாலா விழா மேடைக்கு வருகை தந்தார். தலைமைச் செயலாளர் ஸ்ரீபதி முதல்வரை வரவேற்று மேடையில் அமர வைத்தார்.

சரியாக 8 மணியளவில் ஆளுநர் மூவர்ணக் கொடியை ஏற்றிவைத்து மரியாதை செலுத்தினார். தேசிய கீதம் இசைக்கப்பட்டது. அப்போது கடலோர காவல் படை, ஹெலிகொப்டர் மூலம் வானில் பறந்து வந்து மலர்களை தூவிச் சென்றது. முப்படையினர், காவல்துறை, கடலோரக் காவல் படை, தேசிய மாணவர் படை, சாரணர் படை, ஊர்க்காவல் படையினரின் கண்கவர் அணிவகுப்பும் நடைபெற்றது. படையினரின் அணிவகுப்பு மரியாதையை ஆளுநர் ஏற்றுக் கொண்டார்.

# நடிகை ரம்பாவுக்கு இன்று நிச்சயதார்த்தம்

நடிகை ரம்பா திருமணம் வரும் ஏப்ரல் மாதம் நடக்கிறது. அவருடைய நிச்சயதார்த்த நிகழ்ச்சி சென்னையில் இன்று நடக்கிறது.

'சர்க்கம்' என்ற மலையாள படத்தின் மூலம் திரையுலகுக்கு அறிமுகமானவர் ரம்பா. 'சுந்தர புருஷன்', 'உள்ளத்தை அள்ளித் தா', 'அருணாசலம்', 'நாம் இருவர் நமக்கு இருவர்', 'நினைத்தேன் வந்தாய்' உட்பட ஏராளமான தமிழ்ப் படங்களில் இவர் நடித்திருக்கிறார்.

ரம்பாவுக்கும், கனடாவை சேர்ந்த தொழில் அதிபர் இந்திரனுக்கும் திருமணம் நிச்சயிக்கப்பட்டிருக்கிறது. இவர்கள் திருமணம், சென்னையில் வரும் ஏப்ரல் மாதம் நடக்கிறது.

திருமண நிச்சயதார்த்த நிகழ்ச்சி, சென்னையில் உள்ள ஒரு நட்சத்திர ஹோட்டலில், இன்று (புதன்கிழமை) மாலை 6 மணிக்கு நடைபெறுகிறது.

இதற்கான ஏற்பாடுகளை ரம்பாவின் அண்ணன் வாசு செய்து வருகிறார்.

# இளையராஜா, ரஹ்மான் உட்பட 11 தமிழர்களுக்கு 'பத்ம விருது'

சென்னை, ஜன.27

திரைப்பட இசையமைப்பாளர்கள் இளையராஜா, ஏ.ஆர். ரஹ்மான், நோபல் பரிசு பெற்ற வெங்கட்ராமன் ராமகிருஷ்ணன் உட்பட 11 தமிழர்களுக்கு இந்திய அரசின் உயரிய விருதான பத்ம விருதுகள் அறிவிக்கப்பட்டுள்ளன.

அதன் விவரம் வருமாறு -

பத்ம விபூஷண் விருது பெறுவோர்-

மிருதங்கக் கலைஞர் உமையாள்புரம் சிவராமன் (கலை), டாக்டர் பிரதாப் சந்திர ரெட்டி (தொழில், வணிகம்), வேதியலுக்கான நோபல் பரிசு பெற்ற வெங்கட்ராமன் ராமகிருஷ்ணன் (அறிவியல் மற்றும் பொறியியல்).

பத்ம பூஷண் விருது பெறுவோர் -

இசையமைப்பாளர்கள் இளையராஜா, ஏ.ஆர். ரஹ்மான் (கலை).

பத்ம ஸ்ரீ விருது பெறுவோர் -

பத்மா சேஷாத்ரி பள்ளிகளின் தாளாளர் ராஜலட்சுமி பார்த்தசாரதி, பிரபல எழுத்தாளர் ரங்கநாதன் பார்த்தசாரதி என்கிற இந்திரா பார்த்தசாரதி (இலக்கியம் மற்றும்கல்வி), டாக்டர் ஜலகண்டபுரம் ராமசாமி கிருஷ்ணமூர்த்தி (மருத்துவம்), கார் பந்தய வீரர் நரேன் கார்த்திகேயன் (விளையாட்டு), டி.என். மனோகரன், வேணு ஸ்ரீனிவாசன் (தொழில் மற்றும் வணிகம்).

# உணவு தடையின்றிக் கிடைக்க 2 ஆவது பசுமைப்புரட்சி தேவை

## குடியரசு தின உரையில் பிரதீபா தெரிவிப்பு

புதுடில்லி, ஜன. 27

அத்தியாவசிய உணவுப் பொருட்கள் தங்கு தடையின்றிக் கிடைக்கவும், விலையேற்றத்தைக் கட்டுப்படுத்தவும், இரண்டாவது பசுமைப் புரட்சிக்குரிய நடவடிக்கைகளை உடனடியாக மேற்கொள்ள வேண்டும் என ஜனாதிபதி பிரதீபா பாட்டீல் தெரி வித்துள்ளார்.

இந்தியாவின் 61 ஆவது குடியரசு தினத்தையொட்டி அவர், தொலைக்காட்சி மற்றும் வானொலியில் உரையாற்றினார். அப்போது அவர் கூறியவை வருமாறு -

கடந்த 20 ஆண்டுகளாக பயங்கரவாதிகளின் இலக்காக நம் நாடு இருந்து வருகிறது. பயங்கரவாதத்தை ஒடுக்க, எல்லா விதமான நடவடிக்கைகளை எடுத்து வருகிறோம். சர்வதேச நாடுகளின் ஒத்துழைப்புடன் பயங்கரவாத தடுப்பு நடவடிக்கைகள் தொடரும். இந்தியா, பொருளாதாரத்தில் இரண்டு மடங்கு உயர வேண்டியுள்ளது. இதற்குரிய நடவடிக்கையில் ஈடுபட்டபோது, சர்வதேச அளவில் சமீபத்தில் பொருளாதார மந்த நிலை ஏற்பட்டது. இதை வெற்றிகரமாக சமாளித்துள்ளோம்.



உலக அளவில் உணவு தேவை அதிகரித்து வருகிறது. உணவுப் பற்றாக்குறையால் அத்தியாவசியப் பொருட்களின் விலை உயர்ந்து வருகிறது. எனவே, விவசாய உற்பத்தியைப் பெருக்க வேண்டிய கட்டாயத்தில் இருக்கிறோம். இதற்கு இரண்டாவது பசுமைப் புரட்சியை உடனடியாக ஏற்படுத்தியாக வேண்டும். தரமான விதைகள், புதிய தொழில் நுட்பம், முறையான நீர்ப்பாசன முறைகள், உற்பத்தி செய்யப்பட்ட பொருள் களுக்கு நியாயமான விலை ஆகியவற்றை ஒன்றிணைக்க வேண்டும். இதற்கு விவசாயிகளுடன் விஞ்ஞானிகளும் ஒத்துழைக்க வேண்டும். விவசாயிகள் உழைக்கத் தயாராக உள்ளனர். அவர்களது செயற்பாட்டுக்கு அங்கீகாரம் வேண்டும். ஒரே கண்ணோட்டத்தில் [illegible] டத்துடன் [illegible] வேண்டும் என்றார்.

# ஹிந்தி தேசிய மொழி அல்ல; நீதிமன்றம் பரபரப்புத் தீர்ப்பு

இந்தியாவில் பெரும்பாலான மக்களால் பேசப்படும் ஹிந்தி மொழி, தேசிய மொழி இல்லை - என்று குஜராத் உயர்நீதிமன்றம் பரபரப்புத் தீர்ப்பை வழங்கியுள்ளது.

தொழிற்சாலைகளில் உற்பத்தி செய்யப்படும் அனைத்துப் பொருட்களிலும் அதைப் பற்றிய விவரங்களை ஹிந்தியில் வெளியிட மத்திய, மாநில அரசுகளுக்கு உத்தரவிட வேண்டும் என அகமதாபாத்தைச் சேர்ந்த சுரேஷ் கச்சாடியா என்பவர் குஜராத் உயர் நீதிமன்றத்தில் பொது நல வழக்கு தொடர்ந்தார்.

ஹிந்தி தேசிய மொழியாக இருப்பதாலும், பெருவாரியான மக்கள் ஹிந்தியில் பேசுவதாலும் ஹிந்தியில் விவரங்களை அச்சிட்டு வெளியிட உத்தரவிட வேண்டும் என மனுவில் குறிப்பிட்டிருந்தார்.

இந்த வழக்கை அகமதாபாத் உயர் நீதிமன்றத் தலைமை நீதிபதி எஸ்.ஜே.முகோபாத்யா தலைமையிலான ஆயம் விசாரித்து, ஹிந்தியை தேசிய மொழியாகக் கருத முடியாது என்று தீர்ப்பளித்துள்ளது.

அத்தீர்ப்பில் கூறியிருப்பவை வருமாறு -

ஹிந்தி மொழி நமது தேசிய மொழி என எந்தச் சட்டத்திலும், அரசு அறிவிப்பிலும் கூறப்படவில்லை. இந்திய அரசியல் அமைப்புச் சட்டத்திலும் இந்தி மொழி நமது தேசிய மொழி எனக் குறிப்பிடப்பட வில்லை. ஹிந்தி மொழிக்கு அதிகார பூர்வ மொழி என்ற அந்தஸ்தை மட்டுமே இந்திய அரசமைப்புச் சட்டம் கொடுத்துள்ளது. மத் திய அரசின் எடை மற்றும் அளவு தர நிர்ணய சட்டத்தில்கூட உற்பத்தி செய்யப்ப டும் பொருட்களைப் பற்றிய விவரங்களை ஹிந்தி அல்லது ஆங்கிலத்தில் குறிப்பிட வேண்டும் என்று தான் கூறப்பட்டுள்ளது. இரண்டு மொழியிலும் வெளியிட வேண்டும் என்று கூறப்படவில்லை. பொருள்களின் விவரங்களை ஆங்கிலத்தில் அச்சிட்டு வெளியிடுவது உற்பத்தியாளர்களின் தனி உரிமையாகும். இதனால் உற்பத்திப் பொருள்களின் விவரங்களை ஹிந்தியில் அச்சிட்டு வெளியிட வேண்டும் என மாநில அரசுகளுக்கும், உற்பத்தி நிறுவனங்களுக்கும் உத்தரவிட முடியாது - என்றுள்ளது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




நேற்று நடைபெற்ற ஜனாதிபதித் தேர்தலின் போது ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ மெதமுல்லானை டி.ஏ.ராஜபக்ஷ மகாவித்தியாலயத்தில் வாக்களிப்பதையும், கொள்ளுப்பிட்டியில் வாக்களிக்கச் செல்லும் எதிர்க்கட்சித் தலைவரையும் தமிழ்த் தேசியக் கூட்டமைப்புத் தலைவர் இரா.சம்பந்தன் வாக்களிப்பதையும் யாழ்.தேர்தல் மாவட்டத்தில் உள்ள வாக்களிப்பு நிலையங்களுக்குச் சென்று அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா வாக்களிப்பு நிலையங்களை அவதானிப்பதையும் முதல்வரிசைப் படங்களில் காணலாம்.

நேற்றுக்காலை வேளையில் குடா நாட்டு வாக்குச்சாவடி ஒன்றில் அதிகாரிகள் அமர்ந்திருப்பதையும், வெறிச்சோடிக்கிடக்கும் வாக்குச்சாவடி நிலையம் ஒன்றையும், வாக்குச்சாவடி அருகே பயணிக்கும் மக்களையும் அடுத்த வரிசைப் படங்களில் காணலாம்.

நெடுந்தீவில் வாக்களிக்க மக்கள் செல் வதையும் வாக்களித்துவிட்டு திரும்புவதை யும் சங்கானை, சுழிபுரம் பகுதிகளில் எரிக்கப்பட்ட வேலிகளை கீழ் வரிசைகளில் உள்ள படங்களில் காணலாம்.

(படங்கள்: பிரபா, சுகந்தன், கவிநேசன், லக்ஷ்மன், உமா, நந்தன்)

# இடம்பெயர்ந்த மக்கள் வாக்களிக்கச் செல்ல வவுனியா நகரில் நீண்ட நேரம் காத்திருப்பு

## முற்பகல் 10மணிக்குப் பின்னரே பஸ் வசதி கிடைத்தது

வவுனியா, ஜன.27

வவுனியாவில் பல இடங்களிலும் தங்கி இருக்கும் இடம்பெயர்ந்த வன்னிப் பகுதி மக்கள் வாக்களிப்பதற்கு அங்கு செல்வதற்காக நேற்றுக் காலை வவுனியா நகர பஸ் நிலையத்தில் நீண்ட நேரம் காத்திருக்க வேண்டி ஏற்பட்டது.

கிளிநொச்சி, மாங்குளம், புளியங்குளம் ஆகிய பகுதிகளில் உள்ள வாக்களிப்பு நிலையங்களுக்குச் செல்வதற்கு இலவச போக்குவரத்து வசதிகள் செய்து தரப்படும் என்று வவுனியா அரச அதிபர் அறிவித்திருந்த நிலையில், காலை வேளையிலேயே மக்கள் பஸ் நிலையத்தில் கூடத் தொடங்கினர்.

நீண்ட நேரம் காத்திருந்த இடம்பெயர்ந்த மக்கள், விரக்தி அடைந்த நிலையில் செயலகத்தில் திரண்டனர். அங்கிருந்து அவர்கள் ஒரே நேரத்தில் கூட்டமாக வெளியேறி தமது எதிர்ப்பை வெளிக்காட்டினர் என்று தெரிவிக்கப்பட்டது.

அதன் பின்னர் அவர்களுக்கு பஸ் வசதி செய்து கொடுக்கப்பட்டது. ஆனால் வாக்காளர் அட்டைகளைக் கைவசம் வைத்திருந்தவர்களுக்கே அந்த முன்னுரிமை வாய்ப்புக் கிட்டியது. பின்னர் ஏனையோரும் பயணம் செய்ய அனுமதிக்கப்பட்டது எனத் தெரியவந்தது.

வவுனியாவில் இடம்பெயர்ந்த மக்களுக்கான பல நலன்புரி நிலையங்கள் இருந்த போதிலும் சில நிலையங்களுக்கே கணிசமான பஸ்கள் ஒதுக்கப்பட்டதாகத் தெரிவிக்கப்பட்டது.

இதேவேளை -

வவுனியா 'மெனிக் பாம்' முகாமில் உள்ள மக்கள் வாக்களிப்பதற்காக வன்னிக்குச் செல்வதற்கு அதிகாலையிலேயே தயாராக[illegible] எனினும், உரிய போக்கு[illegible]களுக்கு வழங்கப்படவில்லை என ஜே.வி.பியின் நாடாளுமன்ற உறுப்பினர் விஜித ஹேரத் குற்றஞ்சாட்டியுள்ளார்.

குறிப்பிட்ட 'ஏ - 9' பாதையில் வழமையாக சேவையில் ஈடுபட்டுவந்த பஸ்கள் கூட மர்மமான முறையில் நேற்றுக் காணாமற் போய்விட்டன என வன்னிக்கு நேற்று விஜயம் மேற்கொண்ட விஜித ஹேரத் தெரிவித்தார்.

இடம்பெயர்ந்த மக்கள் வாக்களிப்பதைத் தடுப்பதே அரசின் நோக்கம் என்றும் அவர் குற்றஞ்சாட்டியுள்ளார்.

இதேவேளை, இவ்வாறான குற்றச்சாட்டைத் தேர்தல் கண்காணிப்பு அமைப்பான 'பவ்ரலும்' முன்வைத்துள்ளது.

மன்னார், வவுனியா, மதவாச்சி வீதியில் வழமையாக சேவையிலீடுபடும் பஸ்[illegible] முடியவில்லை என அந்த அமைப்பு தெரிவித்துள்ளது.

(ஒ-சி-401)

# கட்டாக்காலி நாய்களால் சிரமப்படும் கோப்பாய் மருத்துவமனை ஊழியர்கள்

யாழ்ப்பாணம், ஜன.27

கோப்பாய்ப் பிரதேச மருத்துவமனை வளாகத்திற்குள் கட்டாக்காலி நாய்கள் பெருமளவில் காணப்படுவதால் பல்வேறு தொல்லைகள் ஏற்படுவதாக மருத்துவமனை ஊழியர்களும், நோயாளர்களும் விசனம் தெரி விக்கின்றனர்.

சிறிய குட்டிகளாக கடந்த காலங்களில் வந்துசேர்ந்த இந்நாய்கள் தற்போது சுமார் 10-15 வரை பெருகி இச் சூழலிலேயே வசித்து வருகின்றன. இந்த நாய்கள் சிகிச்சை பெறவரும் நோயாளர்களைக் கடிக்க முற்படுவதுடன் ஊழியர்களையும் அச்சுறுத்தி வருகின்றன. மேலும் நோயாளர்கள் தங்கிச் சிகிச்சை பெறும் விடுதிக்குள்ளும் நுழைந்து பொருள்களை இழுத்து அழிவுகளை ஏற்படுத்துவதாகத் தெரிவிக்கப்படுகிறது.

இதனால் நோயாளர்கள் மற்றும் ஊழியர்கள் தாம் மிகவும் அச்சத்துடனேயே மருத் துவமனை வளாகத்துக்குள் நடமாடுவதாகத் தெரிவிக்கின்றனர்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மாநகர சபை, யாழ்ப்பாணம்

# யாழ்ப்பாணத்தில் நீதி நேர்மையான தேர்தல் நடைபெறவில்லை என்று குற்றச்சாட்டு

## சுரேஷ் பிரேமச்சந்திரன் எம்.பி.பேட்டி

யாழ்ப்பாணம், ஜன. 27

யாழ்ப்பாணத்தில் நீதியானதும் நேர்மையானதும் தேர்தல் நடைபெறவில்லை என்றும் வாக்காளர்களுக்கு உரிய போக்குவரத்து வழங்கப்படவில்லை என்றும் வாக்காளர்கள் வாக்களிப்பதற்கான வசதிகளை அரசுத் தரப்பு வேண்டுமென்றே மறுத்துள்ளது என்றும் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு நாடாளுமன்ற உறுப்பினர் சுரேஷ் பிரேமச்சந்திரன் தெரிவித்துள்ளார்.

ஆஸ்திரேலிய 'இன்பத்தமிழ்' வானொலிக்கு வழங்கிய விசேட செவ்வியிலேயே அவர் மேற்கண்டவாறு கூறினார்.

அவர் அதில் மேலும் கூறியவை வருமாறு

யாழ்ப்பாணத்தில் வாக்காளர்கள் இன்று (அதாவது நேற்று) பயணம் செய்து தமது வாக்குகளை பதிவு செய்வதற்குத் தடையாக கோண்டாவில், பருத்தித்துறை, காரைநகர் டிப்போக்களிலிருந்து இராணுவத்தினர் சுமார் 25 இற்கும் மேற்பட்ட பஸ்களை நேற்றிரவே (நேற்றுமுன்தினம்) எடுத்து சென்றுள்ளனர். இதனைவிட, வாக்காளர்களை வாக்களிக்கவிடாமல் தடுக்கும் நடவடிக்கைகள் பலவற்றையும் இராணுவத்தினர் இங்கு மேற்கொண்டனர். முதல்நாள் இரவு மேற்கொள்ளப்பட்ட பல குண்டுத்தாக்குதல் சம்பவங்கள் இயல் பாகவே மக்கள் மத்தியில் பீதிநிலையை உருவாக்கியுள்ளன. இதுவும் வாக்களிப்பு குறைவாக காணப்பட்டதற்கு முக்கிய கார ணம்- என்றார்.

## தபால் மூல வாக்களிப்பு முடிவுகள்

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

மட்டக்களப்பு தேர்தல் மாவட்டம்
* சரத் பொன்சேகா - 3,637
* மஹிந்த ராஜபக்ஷ -1,491

மொனறாகலை தேர்தல் மாவட்டம்
* மஹிந்த ராஜபக்ஷ - 8,871
* சரத் பொன்சேகா - 3,795

புத்தளம் தேர்தல் மாவட்டம்
* மஹிந்த ராஜ பக்ஷ - 4,988
* சரத் பொன் சேகா - 2,464

காலி தேர்தல் மாவட்டம்
* மஹிந்த ராஜபக்ஷ -15,640
* சரத் பொன்சேகா - 7,905

அம்பாந்தோட்டை தேர்தல் மாவட்டம்
* மஹிந்த ராஜபக்ஷ -8,982
* சரத் பொன் சேகா - 3,679

மாத்தறை தேர்தல் மாவட்டம்
* மஹிந்த ராஜபக்ஷ -10,425
* சரத் பொன்சேகா - 5,159

பதுளை தேர்தல் மாவட்டம்
* மஹிந்த ராஜபக்ஷ -14,998
* சரத் பொன்சேகா - 8,056

மாத்தளை தேர்தல் மாவட்டம்
* மஹிந்த ராஜபக்ஷ - 8,846
* சரத் பொன்சேகா - 4,038

## பொன்சேகாவுக்கு...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

ஜயந்த, சம்பிக்க ரணவக்க, ஜி.எல். பீரிஸ் மற்றும் தேசிய முன்னணியின் பிர சார செயலாளர் விமல் வீரவன்ஸ ஆகி யோர் இந்தச் செய்தியாளர் மாநாட்டில் கலந்து கொண்டனர். தேர்தல் வாக்காளர் இடாப்பில் சரத் பொன்சேகாவின் பெயர் இடம் பெறவில்லை. அத்தகைய ஒருவர் தேர்தலில் போட்டியிட முடியாது. அவருக்கு எதிராக நீதிமன்றத்தில் வழக்குத்தாக்கல் செய்யவிருக்கிறோம் என்று செய்தியாளர் மாநாட்டில் தெரிவிக்கப்பட்டது. (ஒ-1)

MUSIC WORLD & COMPUTERS
LEADING IT SUPER MARKET IN JAFFNA
Buy A PC & Get More Free
கணினி ஒன்றை வாங்குவதன் மூலம் ஏனையவற்றை இலவசமாக வீட்டுக்கு எடுத்துச் செல்லுங்கள்.....

Intel 1.6 Ghz ATOM Processor, ATOM Mother Board, RAM 1 Gb DDR II 800, Hard Disk 160 Gb SATA, DVD Writer SATA, ATX Casing, 16" LCD Monitor, Keyboard & Optical Mouse, Multi Media Speaker, UPS 650 W
BUY Only for Rs. 42,500.00
GET FREE: Computer Table, Web Camera, Head phone with Mic, Card Reader and Bluetooth Dongle

Intel 2.60 Dual Core Processor, Asus G31 Mother Board, RAM 1 Gb DDR II 800, Hard Disk 160 Gb SATA, DVD Writer SATA, ATX Casing, 16" LCD Monitor, MM Keyboard & Optical Mouse, Multi Media Speaker, UPS 650 W
BUY Only for Rs. 48,506.00
GET FREE: Computer Table, Web Camera, Head phone with Mic, Card Reader and Bluetooth Dongle

Intel 2.60 Dual Core Processor, Foxconn G31 Mother Board, RAM 1 Gb DDR II 800, Hard Disk 250 Gb SATA, DVD Writer SATA, ATX Casing, 19" LCD Viewsonic Monitor, Multi Media Keyboard, Optical Mouse, Multi Media Speaker, UPS 650 W
BUY Only for Rs. 55,500.00
GET FREE: Computer Table, Web Camera, Head phone with Mic, Card Reader and Bluetooth Dongle

Intel 2.60 Dual Core Processor, Asus G31 Mother Board, RAM 2 Gb DDR II 800, Hard Disk 320 Gb SATA, DVD Writer SATA, ATX Casing, 19" Viewsonic LCD Monitor, Multi Media Keyboard, Optical Mouse, Multi Media Speaker, UPS 650 W
BUY Only for Rs. 58,500.00
GET FREE: Computer Table, Web Camera, Head phone with Mic, Card Reader and Bluetooth Dongle

Warranty : One year to Three years

*இச் சலுகை கையிருப்பு உள்ளவரை மட்டுமே!
LAPTOPS Hp Compaq C 610 Rs. 77,500/= Only
VISA Credit Cards & Debit Cards are acceptable
ASTA Advts' ***0718561250***
MUSIC WORLD & COMPUTERS
141B,Palaly Road, Post Box Junction, Thirunelvely, Jaffna.
musicworld@sltnet.lk / musiccom27@yahoo.com - 021 222 6554

Yogi's Beauty
(The Academy of Beauty Therapy, Hair Dressing & Home Science)
உங்கள் அழகு சம்பந்தப்பட்ட அல்லது முடிசம்பந்தப்பட்ட எந்தக் குறையாக இருந்தாலும் எமது சேவையை நாடுங்கள். சருமங்களுக்கேற்ற வித்தியாசமான நவீன மெசின்களின் உபயோகங்களுடன் சிகிச்சைகள் அளிக்கப்பட்டு நிவர்த்தி செய்யப்படுகின்றன. மற்றும் உங்கள் திருமண நாளில் நீங்கள் அழகு தேவதைகளாக இருக்க ஆசை உண்டா?
Yogi's இன் நவீன அழகு சிகிச்சைகள்
எமது நவீன ஒப்பனை அலங்காரங்கள் மூலம் புதுமையான சேவையைப் பெற்றுக்கொள்ளுங்கள்.
புதிய வகுப்புக்கள் 29.01.2010 ஆரம்பமாக உள்ளன.
*அழகுக்கலை *Advanced Cosmetology Course *நவீன ஒப்பனையும் தலை அலங்காரங்களும்
* கேக் ஐசிங் மாச்சீனி மலர்கள் (Fondant Structures)
சேர விரும்பும் மாணவர்கள் உடன் தொடர்புகொள்ளவும்.
Mrs. Yogini Shanmuganathan
*Diploma in : High Tec Aesthetics & Cosmetology (India)
*Diploma in : Advanced Bridal make up & Character make up (India)
*Diploma in : Home Economics (India & Srilanka)
75, அம்மன் வீதி, நல்லூர், யாழ்ப்பாணம்.
T.P: 0212222796, 0213210077, 0777164923, 0718788814

## பொன்சேகா.....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

சரத் பொன்சேகா இந்தத் தேர்தலில் வென்றாலும், வாக்காளர் பட்டியலில் அவ ரது பெயர் இல்லாத காரணத்தினால் அவர் ஜனாதிபதியாகப் பதவியேற்க முடியாது என்றும் -

நேற்று மதியமே - வாக்களிப்பு நடந்து கொண்டிருந்த சமயமே - பிரசார நடவடிக்கை ஒன்றை அரசு சார்பு ஊடகங்கள் மும்முரமாக மேற்கொண்டன.

எனினும், இந்தப் பிரசாரத்தை அபாண்டமான பொய்ப் புரட்டு என எதிரணித் தரப்புகள் கண்டித்தன.

"தேர்தல்கள் ஆணையாளர் நாயகம் இத் தேர்தலில் ஒரு வேட்பாளராக ஜெனரல் சரத் பொன்சேகாவை ஏற்றுக்கொண்டுள்ளார். எனவே அவருக்குத்தேர்தலில் போட்டியிடத் தகுதி உள்ளதா என்ற கேள்விக்கே இடமில்லை." - என முன்னாள் பிரதம நீதியரசர் சரத் என். சில்வா தெரிவித்தார்.

இதேசமயம், நேற்று நண்பகல் தமது கொழும்பு அலுவலகத்தில் விசேட செய்தியாளர் மாநாடு ஒன்றை நடத்திய ஜெனரல் பொன்சேகா, ஜனாதிபதித் பதவியை ஏற்பதற்குத் தமக்குத் தகைமையீனம் உள்ளது என்ற பிரசாரத்தை அடியோடு மறுத்தார்.

அரசமைப்பின் கீழ் இத் தேர்தலில் போட்டியிடவும், வென்று பதவியேற்கவும் தமக்கு முழுத் தகுதியும் உண்டு எனக் கடந்த ஒன்றரை மாதங்களுக்கு முன்னர் வரை இராணுவத் தளபதி மற்றும் முப்படைகளின் சிரேஷ்ட அதிகாரி ஆகிய பதவிகள் வரை வகித்து வந்த ஜெனரல் பொன்சேகா நேற்றுத் தெரிவித்தார்.

அரசமைப்பின்படி, கட்சி ஒன்றின் வேட்பாளராக ஜனாதிபதித் தேர்தலில் ஒருவர் போட்டியிடுவதற்கு அவரது பெயர் வாக்காளர் பட்டியலில் இருக்கவேண்டியது அவசியம் அல்ல என சட்ட வட்டாரங்கள் தெரிவித்தன. (அ-சி)

## வாக்களிப்புத்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

துள்ள ஐக்கிய தேசியக் கட்சி, ஆயுத முனையில் வாக்கு மோசடிகள் இடம்பெற்றன என்றும் குற்றஞ்சாட்டியுள்ளது.

வாக்களிப்பு ஆரம்பமாவதற்கு முன்னதாக இவ்வாறான சம்பவங்கள் இடம் பெற்றன எனச் சுட்டிக்காட்டியுள்ள ஐக்கிய தேசியக் கட்சி, திங்கட்கிழமை இரவு நாவலப்பிட்டியில் பலரின் வீடுகளுக்குச் சென்ற ஆயுதமேந்திய குழுவினர் அடையாள அட்டைகளைச் சேகரிக்க முயன்றனர் எனவும் தெரிவித்துள்ளது.

இதன் காரணமாக நாவலப்பிட்டித் தேர்தல் தொகுதியில் உள்ள ஆறு வாக்களிப்பு நிலையங்களின் தேர்தல் வாக்களிப்பை ரத்துச்செய்ய வேண்டுமென அக்கட்சி கோரியுள்ளது.

இதேவேளை, திருகோணமலையில் உள்ள கடற்படை முகாமொன்றில் போலி வாக்குப் பெட்டிகள் மறைத்து வைக்கப் பட்டுள்ளன எனவும் ஐக்கிய தேசியக் கட்சி தெரிவித்துள்ளது.

வாக்குப் பெட்டிகளைக் கடல் மார்க்கமாக வாக்கு எண்ணும் நிலையங்களுக்கு எடுத்துச்செல்லும்போது மாற்றுவதற்காகவே இந்தப் பெட்டிகள் குறிப்பிட்ட முகாமில் வைக்கப்பட்டிருந்தன என ஐ.தே. கட்சி தேர்தல் ஆணையாளருக்கு எழுதியுள்ள கடிதத்தில் தெரிவித்துள்ளது.

இதேவேளை, வவுனியாவில் நேற்று இரண்டு கைக்குண்டுத் தாக்குதல்கள் இடம்பெற்றன.

மோட்டார் சைக்கிளில் வந்த இருவரால் மேற்கொள்ளப்பட்ட இந்தக் கைக்குண்டுத் தாக்குதல் காரணமாக யாருக்கும் பாதிப்பு ஏற்படவில்லை எனத் தெரிவிக்கப்பட்டது. (சி)

## தொடர்....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

இவ்வாறான நிலைமைகள் யாழ். மக்கள் சுதந்திரமாக வாக்களிப்பதைத் தடுத்தன.

யாழ். மாவட்ட மக்கள், தமக்கு எதிராக வாக்களிக்கலாம் என அச்சமடைந்தவர்களே இதனைச் செய்திருக்க வேண்டும்.

யாழ். மாவட்டத்தில் தேர்தல் நடவடிக்கைகள் இதன் காரணமாக பாதிக்கப்பட்டால் அந்த மக்களுக்கு மீண்டும் சுதந்திரமாக வாக்களிப்பதற்கான சந்தர்ப்பமொன்றை நீங்கள் வழங்க வேண்டும்.

வவுனியாவில் ஆனந்த குமாரசுவாமி முகாமில் உள்ள இடம் பெயர்ந்த மக்கள் வாக்களிப்பு நிலையங்களுக்குச் செல்வதற்காக பஸ்ஸிற்கு காத்திருந்து பின்னர் ஏமாற்றத்துடன் திரும்பி வந்தனர் எனத் தெரிவித்துள்ளனர்.

நேற்று பகல் வரை இரண்டு பஸ்களில் 140 வாக்காளர்கள் அழைத்துச் செல்லப்பட்டனர். அதே வேளை பகல் 12 மணிவரை 3 ஆயிரம் வாக்காளர்கள் பஸ்ஸிற்காக காத்திருந்தனர்.

இவர்களுக்கு தமது வாக்குகளைச் செலுத்துவதற்கான உரிமையுள்ளது. இவர்களால் நேற்று வாக்களிக்க முடியாமல் போனது. மீண்டும் அவர்களுக்கு அதற்கான வாய்ப்பை வழங்க வேண்டும் - என்றுள்ளது.

## குடாநாட்டில்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

யளவில் கைக்குண்டுத் தாக்குதல் ஒன்று நடத்தப்பட்டது. இதனால் அங்கு நிறுத்தி வைக்கப்பட்டிருந்த சைக்கிள் ஒன்று சேதமடைந்தது.

பெரும்பாலான ஏனைய குண்டுத் தாக்குதல்கள் வாக்களிப்பு நிலையங்க ளுக்கு அண்மையிலேயே இடம்பெற்றுள் ளன எனத் தெரிவிக்கப்படுகின்றது.

ஆனைக்கோட்டை சங்கரப்பிள்ளை வீதியில் நேற்று அதிகாலை 2.30 மணிக் குக் கைக்குண்டுத் தாக்குதல் ஒன்று இடம் பெற்றது. இதனால் அப்பகுதி மக்கள் என்ன நடக்கிறதெனத் தெரியாமல் பெரும் அச்சத்துக்குள்ளாகினார்கள். கைக்குண்டு வெடித்த இடத்தில் அரை அடி ஆழமான குழி ஒன்றும் ஏற்பட்டுள்ளது.

தெல்லிப்பளை பொலிஸ் நிலையத்துக்கு அண்மையிலும் நேற்று அதிகாலை கைக்குண்டுத் தாக்குதல் ஒன்று இடம்பெற்றதாகத் தெரிவிக்கப்பட்டது. இதனால் சேதங்கள் எதுவும் ஏற்படவில்லை என்று கூறப்பட்டது.

வடமராட்சியில் வல்வெட்டித்துறை தெணியம்பைப் பகுதியில் அதிகாலை 3 மணிக்கும், வியாபாரி மூலை - அல்வாய் வீதியில் கலைமணி சனசமூக நிலையத்துக்கு அண்மையில் அதிகாலை 2.45 மணியளவிலும் கைக்குண்டுத்தாக்குதல்கள் இடம்பெற்றுள்ளன. இதனால் சேதங்கள் எதுவும் ஏற்படவில்லை.

யாழ்ப்பாணம், பாண்டியன்தாழ்வு அன்னம்மாள் ஆலயத்துக்குச் சமீபமாகவும், நல்லூரில் சாதனா பாடசாலைக்கு அண்மையிலும் நேற்றுக்காலை 8 மணியளவில் கைக்குண்டுத் தாக்குதல்கள் இடம்பெற்றளன.

தென்மராட்சியில், கச்சாய் வீதியில் அமைந்துள்ள வாக்களிப்பு நிலையமொன்றுக்கு அருகிலும் நேற்றுப் பிற்பகல் ஒரு மணியளவில் கைக்குண்டுத் தாக்குதல் ஒன்று இடம்பெற்றதாகத் தெரிவிக்கப்பட்டது.

இதேவேளை -

நேற்று முன்தினம் நள்ளிரவில் சுழிபுரம், சங்கானை, மாதகல், கோப்பாய், இருபாலை மற்றும் வடமராட்சிப் பகுதிகளில் வீதியோரங்களின் கிடுகு வேலிகள் இனம்தெரியாதோரால் தீயிட்டு எரிக்கப்பட்டன எனத் தெரிவிக்கப்பட்டது. இதனால் அப்பகுதிகளில் பதற்றநிலை காணப்பட்டது.

கந்தரோடை, சங்குவேலி ஆகிய பகுதிகளில் உள்ள வீடுகளுக்கு நேற்று முன்தினம் இரவு சென்ற முகமூடி அணிந்தோர் தேர்தலில் வாக்களிக்க வேண்டாமென வீடுகளில் இருந்தோரை அச்சுறுத்தியதுடன் வாக்காளர் அட்டைகளையும் அபகரித்துச் சென்றனர் எனக் கூறப்படுகின்றது.(50-288,100, 86, 224,38,28,16,14,9,234,207,70)

English பிரத்தியேக வகுப்பு
ஆரம்ப வகுப்பு மாணவர்களுக்கு ஆங்கிலம் கற்பிக்கப்படும்.
தொடர்பு: 0779919609
(94698)

Spoken English & Grammar
(தபால் மூலம் அல்லது வீடுகளுக்கு வந்து)
By: Mr. Ruban (A/L English Teacher &BBA)
SMS Your Address for Course Details
T.P: 0779785749/718561532/0213218931

Institute of Business Management Studies
IBMS
கணனிக்கற்கை நெறிகளுக்கான புதிய பிரிவுகள்
அனைத்து Diploma கணனிக்கற்கை நெறிகளுக்கான புதிய பிரிவுகள் ஆரம்பமாகியுள்ளன
குறைந்த கட்டணத்தில் நிறைவான கணனிக்கல்வியை வழங்கும் IBMS நிறுவனத்தில் இணைந்து கொள்ளுங்கள்
இயக்குனர்
209,மானிப்பாய் வீதி,யாழ்ப்பாணம்.
(வைத்தீஸ்வராச் சந்திக்கருகில்)

இப்பத்திரிகை, நியூ உதயன் பப்ளிகேசன் (பிறைவேற்) லிமிட்டெட் நிறுவனத்தினரால் யாழ்ப்பாணம் கஸ்தூரியார் வீதியில் 361 ஆம் இலக்கத்திலுள்ள அவர்களது பணிமனையில் 27.01.2010 இல் அச்சிட்டு வெளியிடப்பெற்றது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org